


# இனியதமிழும் இந்தி மொழியும்

K. JANAKIRAMAN



ஆசிரியர்: பே.ஆ. குறளேருழவர். D.S.M.

# இனிய தமிழும், இந்தி மொழியும்!

(முதற் பாகம்)

பே. ஆ. குறளேருழவர், D. S. M;
ஆசிரியர்,
8, டெய்லர்ஸ் எஸ்டேட் இரண்டாம் தெரு,
திராவிட மொழிப்பயிற்சிப் பள்ளி,
கோடம்பாக்கம், சென்னை-24.

விலை 50 காசு.

வெளியீடு:
பாலு புத்தக மன்றம்,
(உரிமையாளர்: பே. ஆ. குறளேருழவர், D. S. M.)
36, டாக்டர் காலனி,
சாலிக் கிராமம், சென்னை-26.

# முன்னுரை

மனிதன் எண்ணத்தில் ஒருநாளைக்கு எத்தனையோ எண்ணங்கள் தோன்றுகின்றன. அவன் எண்ணத்தில் தோன்றும் அத்தனையையும் காகிதத்தில் எழுதிவிட முடியாது. அப்படி எழுதினாலும் அதை அச்சேற்றவும் செய்ய முடியாது. அப்படி அச்சேற்றம் செய்திருந்தாலும் அதைப் படிப்போர் தொகையும் விரல்விட்டு எண்ணுமளவிற்கே இருக்கும்.

அவ்வாறெல்லாம் இல்லாமல் நம் தமிழுக்கு வந்துற்ற பேராபத்தையும், நாம் ஆற்றவேண்டிய கடமையையும் சிறிது கூறி, நம் மொழியைப்பற்றி மேலை நாட்டார் கூறிய கருத்தினையும், நம் நாட்டுப் புலவர்கள், அறிஞர்கள், மற்றவர்கள் கூறிய கருத்துக்களையெல்லாம் ஒருங்கே திரட்டி எடுத்துக் கொடுக்குமளவிற்கு இல்லாவிட்டாலும் என் அறிவிற்கு எட்டியதைத் தந்துள்ளேன். 8508

தமிழில் முதல், வழி, சார்பு என நூல் மூவகைப்படும். இந்நூல் மேற்கூறிய மூன்று முறையிலும் அமைந்திருக்கிறதென்று கருதுகிறேன். இந்நூல் போன்று இதற்முன் ஒரு நூல் வந்ததில்லை. அந்த முறையில் இது முதல் நூலாகவும், இதில் மற்றவர்கள் கூறிய கருத்துக்களைத் தொகுக்கப்பட்டிருப்பதால் அம்முறையில் வழி நூலாகவும், அவ்வாறு வழி நூலாக அமைந்த பின்னரும் இஃது ஒரு சார்பு மக்கட்காக (தமிழர்கட்காக) ஏற்பட்டதால் சார்பு நூலாகவும் இருக்கிறதென்பது என் எண்ணம். உங்கள் எண்ணக் குவியலையும் தந்தருள வேண்டுவதோடு, இந்நூலினை உங்கட் கரத்தில் தந்து மகிழ்கின்றேன்.

இந்நூல் வெளிவர பெரிதும் உழைத்த முல்லை அச்சக உரிமையாளர் திரு.முல்லை சத்தி அவர்கட்கும், திரு.வளர்மதி, திரு. மு. செல்வராசன் ஆகியோர்கட்கும், முல்லை அச்சகத் தொழிலாளர்த் தோழர்கட்கும் என் நெஞ்சம் கலந்த நன்றிப் பெருக்கினைச் செலுத்திப் பணிகின்றேன்.

இன்னன்,
தோழமையுள்ள,
பே. ஆ. குறளேருழவர்.

# இனிய தமிழும், இந்தி மொழியும்.

*போர் ! போர் !! போர் !!! ஆம் ! தமிழர்தம் வெற்றிப் போர் தொடங்கிவிட்டது. நாம் வெற்றிப் போர் நடத்த வேண்டியதிருக்கிறதென்ருல், அது சாதாரணப் போர் அல்ல. நெடுநாள் நடக்கும் போராகும். தமிழர்களாகிய நாம் இதற்குமுன் எத்தனையோ பேரர்கள் நடத்தியிருப்போம். ஆனல் நாம் இப்பொழுது நடத்தும் போர் போன்று இதற்கு முன் எந்தப் போரும் அவ்வாறு நடந்ததில்லை என்று சொல் லும் அளவிற்கு அது நடக்க இருக்கிறது. இந்திய அரசினரை எதிர்த்து; இல்லை இல்லை இந்தி(ய) அரசை எதிர்த்துத் தமிழ்ப் பெருமக்கள் அத்தனை பேரும் ஒன்று கூடி மாபெரும் போராக அதை நடத்த வேண்டிய கட்டாய நிலை வந்துற்றது.

இப்பொழுது நடைபெறும் போர் நம் நாட்டின் கண் வந்துற்ற இந்திமொழி எதிர்ப்புப் போரர்கும். இப்போரினை நாமாகத் தொடங்கியதில்லை. இந்தியப் பேர்ரசின் பிடிவாதக் கொள்கையினுல் தொடங்கியதாகும்.

நம் மொழியினையை நம் முன்னேர்கள் எப்படியெல்லாம் வளர்த்தார்களோ அதையெல்லாம் ஒருமிக்க ஒழிக்க நடு அரசு எண்ணி விட்டதென்றுதான் கூறவேண்டும். நம் மொழியைக் கண்ணெனக் காப்பாற்றியிருக்கிருர்கள் நம் முன்னேர்கள். நம் மொழியை நம் பெருங்குடித் தமிர்கள் எப்படி யெல்லாமோ வளர்த்து இருக்கிருர்கள். நம் மொழி யைப் பேணுவற்கு நம் முன்னேர்கள் அரும்பாடுபட்டுள்ளார் கள்.

தமது திறமையினுலும், புலமையினுலும் நம் மொழியைப் வளர்த்திருக்கிருர்கள். அத்தகைய நம் தமிழ் மொழிக்கு இன்று வந்துள்ள ஆபத்துப் பேராபத்தாகும்.

இந்திய அரசாங்கம் என்று ஏற்பட்டதோ அன்றையி லிருந்தே நம் மொழிக்கு ஊறுதேட ஆரம்பித்து விட்டார் கள். அவர் தம் மொழியான இந்திமொழியைத் தமிழர் களிடம் திணித்துத் தமிழராகிய நம் மொழியை அழிக்க

*இங்குப் போர் என்று குறிப்பிடுவது அறப்போராகும்.

முற்பட்டு விட்டார்கள். ஆதலால் நாம் அறப்போர் நடத்து கின்றோம்.

மொழிப் போராட்டம் நீண்ட நாட்களாக நம் நாட்டில் நடந்து வருகின்றது. அப்போராட்டம் ஓய்ந்தபாடில்லை. இம்மொழிப் போராட்டம எத்தனை நாட்கள் நடைபெறும் ? இதனை ஏன் நடத்த வேண்டும் என்பதையெல்லாம் சிந்திக்க வேண்டும்.

நாம் நடத்தும் போருக்குத் தனிப் பெருந் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களே தலைவராவார்கள். நாம் நடத்தும் போர்க்குத் தமிழ்நாட்டிலுள்ள எல்லா இயக்கங்களும் ஆதரவு கொடுத்தருளல் வேண்டும். இது அவர்கள் கடமை.

இந்தி எதிர்க்கும் போர் எந்த ஒரு தனிக் கட்சிக்கும் உரிமையுடையதல்ல. எல்லா இயக்கங்களுக்கும் உரியது. இது குறித்துத் திராவிட முன்னேற்றக்கழகப் போராட்டக் குழு என்ன முடிவு எடுத்திருக்கின்றதோ — அதை மற்றவர் களும் சிரமேற்கொண்டு நடத்தல் நலமாகும். அப்படிக் கலந்து கொள்ள இயலாதவர்கள் தனித்தனியேகூட நடத்தலாம். ஆனால் இம்மொழிப் போராட்டத்தைக் கிண்டல் செய்பவர்களோ, இப்போராட்டத்தைக் காட்டிக் கொடுப் பவர்களோ. தூரவிலகி நின்று தப்பித்துக் கொள்ளும் இயக் கங்களோ, நம்மை நசுக்கி அடக்கி ஒடுக்கும் அரசோ நம்மை வெஞ்சிறையில் பல்லாண்டுப் போட்டுச் சித்திரவதைச் செய்பவர்களோ; அவர்கள் எவராயினும் சரி அவர்கள் நமக்கு எதிரிகள் அல்ல. தமிழ்த் தாய்க்கும் தமிழ் மண்ணிற் கும் முதல்தர எதிரிகளாகுவார்கள். அவர்கட்கு மன்னிப்புக் கிடையாது என்று கூறி இனிய தமிழையும், இந்தி மொழியை யும் ஆராய்வோம்.

“ கல்கத்தா கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றிய திரு: கில்சிரைட் சிட்டு :(வெள்ளைக்காரர்) என்பவர்தான் இந்தி மொழியைக் கண்டு பிடித்தார். அதாவது இன்றைக்கு நூற்றைம்பது அல்லது நூற்று அறுபது ஆண்டுகட்கு முன் தான் இந்தி மொழி கண்டு பிடிக்கப்பட்டது” என்று ஒருவர் குறிப்பிடுகின்றார்.

ஆனால் நம் தமிழ் மொழி அவ்வாறில்லை. கல்தோன்றி மண் தோன்றா காலத்துமுன் தோன்றியது. அப்படிப்பட்ட நம் மொழியைப் போற்றாத தமிழ்ப் புலவர்களே இல்லை என்று கூறலாம்.

சோமன் வழிவந்த பாண்டியா
நின்நாடுடைத்து நல்ல தமிழ்

என்று ஔவையார் புகழ்ந்தார். அவர் நம் தமிழ் மொழி எவ்வளவு சிறப்புடையதென்பதைத் தெளிவுறக் கூறியுள்ள நயம் போற்றத்தக்கது.

சொல் என்றும், பூம்போது, தோற்றிப் பொருள் என்றும்
நல் இருந் தீந்தாது நாறுதலால்—மல்லிகையின்
வண்டுஆர் கமிழ்தாமம் அன்றே மலையாத
தான் தாரான் கூடல் தமிழ்.

என்று மாங்குடி மருதனூர் பாடினூர். பெரும் புலவர் பாடிய இச்செய்யுள் நலமும் உணரத்தக்கது.

இனிக் கம்பர்க்கு இருந்த தமிழ்ப் பற்றினையும் அறியத்தக்கது.

" நீண்ட தமிழால் நேமியன் அளந்தான் "

என்று கூறுகின்றூர்.

இத்தகுப் புலவர் வரிசையில் இடம் பெற்றவராகக் கருதப்படும் பாரதி கூற்றினையுங்கவனியுங்கள்.

"தெள்ளுற்ற தமிழ் அமிழ்தின் சுவை கண்டார்; இங்கு அமரர் சிறப்புக் கண்டார்."

தமிழில் சுவை எங்கு உளது என்று கேட்போரும் உண்டோ ? பாரதியின் மொழியைப் படித்தவனும் பாவலானுவான் என்பதாம். அடுத்துப் பார்ப்போம்;

"என்றுமுள தென்தமிழ்"

என்றும்,

தென்தமிழ் நாட்டார்கண் பொதிகையில்
திருமுனிவன் தமிழ்ச்சங்கம் சேர்க்கின்றீரேல்
என்றுமவன் உறைவிடமாம்

என்றும்,

வையக வரைப்பில் தமிழ்க்கங்கேட்பப்
பொய்யாச் செந்நா றெளிய எத்திப்
படுப வென்ப சிலர் நாளும் (புறம்)

என்று நாட்டைப் பற்றியும் நம் தமிழ்ப் பெருங்குடியினர் பாடிய பாடல்களைத் தமிழ் மகன் ஒவ்வொருவரும் படிக்க வேண்டும்.

தமிழில்தான் எத்துணை இலக்கியங்கள். தொகை நூல்கள்தான் நம் மொழியில் எத்துணை? சுருங்கிய சொல்லால் கூறும் செய்யுள் நூல்கள்தான் எத்துணை? காப்பியங்கள் தான் எத்துணை? சிற்றிலக்கியங்கள்தான் எத்துணை?

நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந் தோரேத்துங் கலியோடகம் புறமென்று
இத்தறத்தே எட்டுத்தொகை

என்றும்,

நாலடி நான்மணி நானாற்பதைந்திணை முப்
பால் கடுங்கோவை பழமொழி—மாமூலம்
இன்னிலைய காஞ்சியோடு ஏலாதி என்பவே
கைநிலையோ டங்கீழ்க் கணக்கு

என்றும் சங்க நூலினைத்தொகையிடுவர். இன்னும் ஈரேழ்த் தலம் பற்றிய நூல்கள் உண்டு. அந்நூலினைக்;

கூடல் புனவாயில் குற்றாலம் ஆப்பனூர்
ஏடகம் நெல்வேலி இராமேசம்—ஆடானை
தென்பரங்குன் றஞ்சுழியல் தென்றிருப்புத் தூர்கானை
வன்கொடுங்கு ன் றம்பூ வனம்

என்றும் கூறுவர் இப்பதினான்கு தலங்கட்கும் தனித் தனியே இருக்கும் தலபுராணங்களைத் தவிர பதினெட்டு புராணக்கதைகளும் உண்டு. சைவ சமயத்தைப் பற்றியும், வைணவ மதத்தைப் பற்றியும் நூல்கள் எண்ணிறந்தன உண்டு. அதன் தொகையை இங்குக் கணக்கிடின் இன்னும் விரியும். அதனை இரண்டாம் பாகத்தில் காண்போம்.

தமிழ் எங்கள் இளமைக்குப்பால்—இன்பத்
தமிழ் எங்கள் புகழ்மிக்கப் புலவர்க்கு வேல்

என்று கவிஞர் பாரதிதாசனார் அறைகின்றார். நாம் பள்ளியில் பயிலுங்காலத்தாயிடம் பால் குடிப்பது போன்று

தமிழைக் கற்கின்றோம். அதனாலேயே கவிஞர் தமிழ் இளமைக்குப்பால் என்று கூறினார். ஆனால் அதே தமிழ்; புலவர்க்கு வேலாகவும் மாறுகிறது. தமிழில் வாதுசெய்து வென்றிட வேறு மொழிக்காரர் இல்லை. தமிழே தமிழ்ப் புலவர்க்கு வேலாக அமைகிறது என்பதுதானே கவிஞர் தம் கூற்று.

கவிஞர் பெருமகனார் மேலுங் கூறுகின்றார் கேளுங்கள்:

மங்கை ஒருத்தி தரும் சுகத்தைவிட எங்கள்
மாத்தமிழுக்கு ஈடில்லை என்றுரைப்போம்

உள்ளபடியே நமக்குச் சுகம் தருகிறாள் மங்கையவள் தான். என்றாலும் அவள் தரும் சுகத்தைவிட இவ்வுலகில் நாம் சுகம் பெறுவது தமிழ் ஒன்றில்தான்.

கவிஞர் தம் பாடலினைப் படித்தாலே சுகந்தான்; தமக்கு நலம் பயப்பதுதான். மேலும் கவிஞர் கூறுவதைக் கவனிப்போம்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ்
என்று சங்கே நீ முழங்கு

என்றும்,

பைந்தமிழ் மொழிக்குப் பங்கம் வந்திடின்
பச்சை இரத்தம் பாய்ச்சிடுவோம்

என்றும்,

ஆங்கிலத்தைக் கற்கையிலும்
அயல் மொழியைக் கற்கையிலும்,
தமிழ் மொழியை உயிராய்க் கொள்வீர்

என்றும் கூறுகின்றார். கவிஞர் பெருமகனாரின் தமிழ் மொழிப் பற்றுத் தமிழ் மகனாய்ப்பிறந்த ஒவ்வொருவருக்கும் இருத்தல்வேண்டும்.

இலக்கணக் கவிஞர் சொல்லின்பம் தேடுவர்
வழக்குச்சொல் தேடுவர் வன்கணாளர்—நிலத்தில்
ஊறுநீல் வண்டதில் தலைக்குறைக் கமலத்தைச்
சாரும் தன்மைபோல்

ஔவையார் பாடிய பாடலாகும்; மேலே காணப் பெறுவது.

கவிஞர்கள் இலக்கணத்தோடு சொல்லின்பத்தை நாடுவர். ஆனால் வன்கணாளர்கள் இருக்கின்றார்களே; அவர்கள் எப்பொழுதும் வழக்குச் சொல் தேடுவார்கள். வன்கணாளர் வழக்குச் சொல் தேடுவார் என்பது நாவினால் சொல்லத் தக்கச் சொற்கள் அல்லாதவைகளைச் சொல்வார் என்பதாம்.

நாவினாற் கூறத்தகாதச் சொற்களைக் கூறுவதே தன்னுடைய பெருந்தன்மையான பேச்சாகுமென்று கருதுபவர்கள் வன்கணாளர். அவ்வாறு வழக்குச் சொற்கள் தேடும் வன்கணாளர்களை ஔவையார் எதனுடன் ஒப்பிட்டுள்ளார் என்பதை அறிந்தீர்களா ?

நிலத்திலூறும் வண்டினை நீங்கள் கண்டிருப்பீர்கள். ஆனால் அவ்வண்டினைப் போன்று இன்னோரன்ன வண்டினமும் உண்டு. அவ்வண்டினம் எப்பொழுதும் பரந்து திரிந்து செல்லுந்தன்மையுடையன.

பறந்து திரிந்துசெல்லும் வண்டினம் பூக்களின் தேனினை நாடும். அது போன்றே கவிஞர்கள் இலக்கணச் சொல்லின்பம் நாடுவர்.

ஆனால் வன்கணாளர் எதனை நாடுவர்? நிலத்திலூறும் வண்டினம் எதனை நாடும்? தலைக்குறைக்கமலத்தை நாடும். "கமலம்" என்பதிலுள்ள "க" என்ற எழுத்தை எடுத்துவிட்டால் அது என்ன பொருள்தரும், மலம் என்று பொருள் தரும். அவ்வாறு மலத்தையே நிலத்திலுள்ள வண்டு நாடும்.

மலத்தை நாடும் வண்டினத்தைச் சார்ந்தவர் வன்கணாளர். ஆனால் கமலத்தினுள்ளே கிடைக்கப்பெறும் தேனினை நாடும் வண்டினத்தைச் சார்ந்தவர் கவிஞர்.

கவிஞர்களையும், வன்கணாளர்களையும் ஔவையார் ஒப்பிட்டுச் சொல்லிய நயம் மிகமிக உணரத்தக்கது.

வன்கணாளர் மலத்தை நாடும் வண்டினத்தைச் சார்ந்தவர்கள் என்பதைக் கூறத்தலைக்குறைக்கமலம் என்று கூறிய சொற்கள் எத்தன்மையான செறிவுடைய சொற்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

இலக்கியங்களில் கிராமிய இலக்கியமென்று ஒன்றுண்டு. அதையும் படியுங்கள். கிராமிய இலக்கியத்தில்தான் எத்துணைச் சுவை, எத்துணை நயம், எத்துணை எழில்.

ஒரு பெண் தன் காதலன் நினைவிலேயே கிடக்கின்றாள். அவள் காதலன் செய்தொழிலை எண்ணிப்படிக்கின்றாள்:

செடியோரம் கிணறு வெட்டி
சேவல்காளை ரெண்டு கட்டி
அத்தை மகன் ஓட்டும் தண்ணீர்,
அந்தனையும் சர்க்கரை யே.
மாலை யோரம் கிணறு வெட்டி
மயிலைக்காளை ரெண்டு கட்டி
அத்தை மகன் ஓட்டும் தண்ணீர்
அத்தனையும் சர்க்கரை யே.

இன்னொருவன் தன் காதலியுடன் பேசுகின்றான். ஆனால் கவிதை வடிவில்.

களையெடுக்கும் பெரிய குளம்
கணக்கெழுதும் ஆலமரம்
கொத்தடிக்கு கொட்டாரமாம்
கூறுவைக்கும் களத்து மேடு

அவனுடைய பாடலுக்கு மறுத்துரைக்கின்றாள் அவன் காதலி.

வாய்க்கா வரப்புச்சாமி
வயக்காட்டுப் பொன்னுச்சாமி
களையெடுக்கும் பெண்களுக்கு
காவலுக்கு வந்தசாமி.

அவளுடைய பாடலுக்குப் பதில் கூறுகின்றான்.

கண்ணாடி வளையல் போட்டுக்
களையெடுக்க வந்த புள்ளே
கண்ணாடி மின்னலிலே உன்
களையெடுப்புப் பிந்து தடி.

அவள் வேலையில் பின் தங்கியதைக் கூறி மேலும் பாடுகின்றான்,

வெள்ளிப்பிடி வளையல் நல்ல
விடலைப் புள்ளே வளைவிகையில்
சொல்லிய படிச்சவளை நல்லா·
சுழட்டுதில்லை நெற் கலையை!

வேறு ஒருவன் பாடுகின்றான். அதனையும் படியுங்கள்.

புள்ளி போட்ட ரவிக்கைக் காரி
புளியங் கொட்டைச் சேலைக்காரி
நெல்லறுக்கப் போகும் போது—நான்
நெல்லி மரக் காவலடி!
கஞ்சிக் கலையங் கொண்டு
கருக்குவாளைத் தோளிட்டு
அறுப்பறுக்கும் போகும் போது—உன்
இருப்பிடத்தைச் சொல்லிடடி!

மாமியார் வீட்டிலிருக்கும் தன்னுடைய மனைவியைப் பாடுகின்றான் ஒருவன்.

மாமி வீட்டிலே
மலரொன்று பூத்திருக்கு
ஆய்ந்து முகர்ந்தேன்
அழகொழிய மணக்குதில்லை.

அவனை மடக்கி அவளும் பாடுகின்றாள்.

அத்தர் புனுகுகளாம்
அழகான (!) பவுடர் மணம்
இஞ்சி தின்ற குரங்கு போல
இவர்க்கென்ன வந்த பசி!

அவன் விடுவானா? மேலும் பாடுகின்றான்.

இடுப்புச் சிறுத்த பெண்ணே!
இருகாலும் நீண்டவளே!
கொக்குக் கண் போட்டே உனக்குக்
கோபமென்ன என்னோடே?

அவள் திரும்பவும் பாடுகின்றாள்:

சுட்டகட்டை போலே
சுடுகாட்டுப் பேய்போலே
அட்ட முகனு—நீ
அடுபடிக்கும் ஆகாதடா!

இன்னேரன்ன காதலனும், காதலியும் பேசுகின்ருர்கள்.

ஈதி இடைஞ்சலிலே
இடி விழுந்த கானலிலே
பாறை இடைஞ் சலிலே.
பயமும் மெத்த ஆகுமடி!

வழியிடைப் பயத்தைக் கூறினுன் காதலன். அதற்கு அவள் அப்பயம் தனக்கில்லை என்பதைக் கூறுவதைப்படியுங்கள்.

இருட்டை இருட்டடிக்க
இந்திரனைப் பேயடிக்கச்
சாம வழிதனில் நடக்கச்
சம்மதமே எந்தனுக்கு

இருவரும் நடந்து சென்ருர்கள். அப்பொழுது அவர்கள் பேசிக் கொள்ளுகின்ருர்கள். அதுவும் கவிதையில்.

அவன்: கையோடு கை சேர்த்துக்
கானல் வழி நடக்கையிலே
மெய்சார்ந்து வீழ்ந்ததென்ன
மென்குயிலே கண்ணுட்டி?

அவள்: கையோடு கைசேர்த்துக்
கானல்வழி நடக்கையிலே
கண்டேன் உனதழகை.
கட்டழகா சோர்ந்து விட்டேன்.

மேலும் பாடுகின்ருள்:

கண்ணுடி தலையழகா!
காக்காயி மூக்கழகா!

அவன்: எண்ணெய்த் தலையழகி
எழுத்தாணி மூக்கழகி

இவ்வாறு இருவரும் பேசிப்பேசி வழி நடந்தார்கள்.

மற்ருெரு காதலர்கள் பாடுகின்ருர்கள். ஆற்றுக்கு அக் கரையிலும், இக்கரையிலுமாக.

அவன். ஆற்றிலே தண்ணீர் வர
ஆளிறங்காத் தண்ணீர் வர
நீச்சலிலே நான் வருவேன்
நிலக்கிளி தூங்காதடி

அவள்: ஆற்றுக்கு அந்தப்புறம்
ஐந்தாறு தென்னைமரம்
வச்சமரம் பார்க்கப் போன
மச்சான் வரக் கண்டீர்களோ ?

ஆற்றினிலே நின்றுவிட்ட வண்டியை ஒருபெண் தள்ளுகிருள். அதையும் கவிதையில் கண்டார்கள்.

ஆற்றுக்குள்ளே போனவண்டி
சேற்றுக்குள்ளே நிற்கையிலே
கொண்டைப்போட்ட குமரியவள்
மண்டிப்போட்டுத் தள்ளுகிருளே!

இன்னேரன்ன காதலர்கள் பாட்டைக் கேளுங்கள்.

காதலி: ஈரல்துளிரே! இலங்கும்
அந்தச் சூரியனே!
மாதளம்பூவே! மச்சான்
மனம்நிறையச் சம்மதமா ?

காதலன்: தங்கக்கிளியே: என்
தாய்மாமன் ஈன்ற கண்ணே
மையிட்ட கண்ணே! உன்னை
மறந்திருக்கக் கூடுதல்லே!

காதலி: கடிதம் வரக் காட்டவோ
கதைத் திறக்க நான் வரட்டோ ?
தூது அனுப்பட்டோ
சொல்லு கிளியே சம்மதத்தை.

மற்ருெரு காதலர்தள்:

**காதலன்:** நிலவும் எழும்பட்டும்
நிக்கனம் போகட்டும்
அப்பாவும் உறங்கட்டும்
அப்போ வந்தாச்சம்மதந்தான்:

ஒருபெண் தன் காதலன் நிறத்தை எடுத்தியம்பும் சொன் நயத்தைப் பாருங்கள்.

நாவற் பழத்திலேயும்
நல் காயம் பூவிலேயும்
காக இறகுலேயும் நல்ல
கரும்பு எங்க மச்சான்.

இன்னொருத்தியும் பாடுகின்றாள்.

அந்திப்பட்ட நேரம்
அசலுக்குப் பின்னால் உங்கள்
சந்திப்பைக் காணேன்
சாதிமாற்றம் தானுக்கும்.

இன்னொரு பாடல்:

குஞ்சிமுகமும்
கூர்விழுந்த முக்காடும்
நெற்றியில் பூரணையும் என்
நெஞ்சை விட்டகலுவதில்லைகா.

வேறொரு பாடல்:

பொடு பொடுத்த மழைத்தூற்றல்
பூங்கார மானநிலா
கருமருட்டு மாமிமகள்
கதவுதிற கண்மணியே!

காதலனைத் தேடுகிறாள் கன்னியொருத்தி. அதுவும் கவிதையில்.

அந்திப் பொழுது
அழகான செவ்வானம்
இந்தநல்ல வேலையில்
ஏங்கே சென்றுரோ

எங்குச் சென்ருர் என்பதை நீங்கள் அறிந்தால் அக் கன்னிக்குத் தெரிவியுங்கள்.
ஒருவன் கேள்வி:

மார்பளவு தண்ணீரில் மன்னி
மன்னிப் போற பெண்ணே !
மார்புக்கு மேலே யிருக்கும்
மாதளங்காய் என்ன விலை ?

அவள் பதில்;

மாதளங்காயு மில்லை
மருங்காலும் பிஞ்சுமில்லை.
அந்தப் பாலகன் குடிக்கும்
பால் முலையடா சண்டாளா !

இன்னொரு பாடல்:

செக்கச்சிவந்த கன்னம்
சேல்விழியாள் நடையில் அன்னம்
செந்தாமரையாகும் முகம்
செதுக்கி வைத்த
செம்பொற் சிலையாகுமே வடிவம்

மேலும் ஒருபாடல்:

அவன்: வெள்ளை வெள்ளைச் சீலைக்காரி
வெள்ள ரிக்காய்க் கூடைக்காரி
கோம்பை மலை வெள் ளரிக்காய்
கொண்டுவாடி தின்னு பார்ப்போம்.

அவள்: செம்மறி ஆட்டுக்காரா
சிவந்த மச்சான் என்கொழுந்தா
செத்தெ வளர்ந் தையாஞல்
செத்திடுவேன் உன் அழகில்.

குழந்தைகட்குக் காது குத்திஞல் அதற்கு ஒருபாடல்:

அள்ளிச் செலவழித்து
அர்ச்சுனர்க்குக் காதுகுத்தச்

சிந்திச் செலவழித்துச்
செல்வனுக்குக் காதுகுத்த
எள்ளு இருகலமாம்
இளநீர்க்காய் முந்நூறும்
பாக்குப் பதின் கலமாம்
பச்சரிசி முக்கலமாம்
தட்டிக் கலத்துடனே
சர்க்கரையை மேல்போட்டுக்
கொட்டிக் கலக்கனுமே
கோவலர்க்கு காதுகுத்த

இத்துடன் கிராமிய இலக்கியத்தை நிறுத்திவிட்டு சங்ககாலப் பாடலுக்குச் செல்லுவோம்.

நீவாத மாதவா தாமோக ராகமோ
தாவாத மாதவா நீ

மேற்கூறிய குறள் வெண்பாவினையைப் படியுங்கள். அதன் பின் நீங்கள் படித்ததை மாற்றிப் படியுங்கள். அப் படிப் படித்தபின் பாருங்கள் — நீங்கள் முதற்கண் படித் ததும் இரண்டாம் முறைமாற்றிப் படித்ததும் ஒரே தன்மை யாக இருப்பதை. மாலையை எப்பக்கம் திருப்பினும் ஒரே தன்மையாய் இருத்தல் போலே; இச்செய்யுள் அவ்வாறே இருப்பதால் இதற்குப் பெயர் மாலை மாற்று என்று பெயர் இதுபோன்று பல பாடல் நம் மொழியில் உண்டு. அதை அடுத்த பாகத்தில் எழுதுவோம்.

மாவா நீதா தாநீ வாமா
வாயா வாமே மேவா யாவா
நீவா ராமா மாரா வாநீ
தாமே மாரா ராமா மேதா

இச்செய்யுளை நாற்புறமும் தலைப்பாக வைத்து வரிசை யாகப் படித்தாலுஞ்சரி மடக்கிப்படித்தாலுஞ்சரி நான்கு அடிகளையும் மேலேற்றிப் படித்தாலுஞ் சரி, கீழிறக்கிப் படித் தாலுஞ்சரி அதன் தன்மை கெடாது இருப்பதை அறியுங் கள். மேலும் இச்செய்யுள் சொற்கள் நெடில் எழுத்தாகவும் அமைந்துள்ளதையும் அறியற்பாலது. இது போன்றும் பல பாடல்களும் உண்டு. அதை அடுத்த பாகத்தில் காண் போம். இப்பாடல்கள் போன்று இந்தி மொழியின்கண்

உண்டோ? இந்தி மொழிக்கு வால்பிடிக்கும் பெரியவர்கள் இதைச் சிந்திக்கவேண்டும்.

"நம் தமிழ்மொழி உயர்நிலையிலிருந்து குன்றிய நிலையில் தான் நம்மிடையே இலக்கிய நூல்கள் தோன்றின, என்று கூறுகின்றார்கள். குன்றிய காலத்திலே தோன்றிய நம் மொழி இவ்வளவு சிறப்புடையதெனின்; ஈடும் எடுப்பும் அற்றபோது தோன்றிய காலத்தில் தோன்றிய இலக்கியங் கள் இன்னும் சிறப்பு மிக்கதாக அன்றோ இருந்திருத்தல் வேண்டும்.;"

என்று ஈழத்துப் பெருமகனார் திரு. தனிநாயக அடிகள் கூறுகின்றார். ஆகலால் நம் தமிழ் நாட்டில் சுமார் 2500 ஆண்டுகட்கு முன் நாம் தனித்தமிழ்ப் பேசப்பட்டும் எழுதப் பட்டும் இருத்தல் வேண்டும். அதற்கு முன், நல்ல தனித் தமிழ்ப் பேசப்பட்டும் இலக்கியங்கள் ஆக்கப்பட்டும் இருத் தல் வேண்டும். அதன் பின்னர் சிறுக சிறுக சிதறுண்டு சீனதிசையடைந்துள்ளது. காலத்தின் கடையில் தோன்றிய நம் மொழி இவ்வளவு சிறப்புடையின் அம்மம்ம! நம் மொழி எவ்வளவு சிறப்பாய் இருத்தல் வேண்டும்? காலத் தின் கடையிலிருந்து தமிழ் வளர்த்த புலவர் தம் பெயரி னையை அடுத்த பாகத்தில் காண்போம். அப்புலவர் பெரு மக்கள் நூற்றைம்பதுக்கு மேற்பட்டவர்கள் ஆகுவார்கள்.

தமிழ் மொழியைக் குறித்துக் கூறியதை இம்மட்டோடு நிறுத்திக்கொண்டு வடமொழியைப் பற்றிச் சிறிது ஆராய்ந் தால்;—அதனால் நாம் ஏன் இந்தி மொழியை எதிர்க்கின் றோம் என்பது நன்கு விளங்கும்.

வடமொழி தென்னாட்டில் ஆதிக்கம் கொண்ட இடைக் காலத்தில் மணிப்பிரவாளம் என்ற ஒரு நடைத் தோன் றியது—இது தமிழ்ச் .சொற்களும், வடமொழிச் சொற் களும் கலந்த உரைநடையாகும். அதுபோன்று வீரசோழியம் என்ற நூலும் வடமொழி வாழ்க்கையைத் தழுவிய தமிழ் இலக்கணமாகும்.

இந்நூல்களையெல்லாம் குறித்து ஆராயப்புகின் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் கிரந்த எழுத்தும், மணிப்பிரவாள நடையும், தேவநாகரி எழுத்துக்களும், தமிழ்நாட்டில் குடி புகுந்தன.

ஆயிரத்து நூறு ஆண்டுகட்கு முன்பே தமிழ்நாட்டில் கல் வெட்டுகளில் கிரந்த எழுத்துக்களைப் புகுத்தினர். அதன்

விளைவு இன்றும் அதன் ஆதிக்கம் நீங்கவில்லை என்ற போதிலும் விசயநகர மன்னரும் தஞ்சையாண்ட மாராட்டிய மன்னரும் கிரந்த எழுத்தைப் பற்றி எடுத்துக்கொண்ட முயற்சிகள் தோல்வியடையவே, தேவநாகரி, எழுத்தைப் போற்றி எழுதினர்.

ஐரோப்பிய மொழியினுலும் நம் தமிழ் மொழி சிதறுண்டது. வட மொழியினுல் எப்படித் தமிழ்ச் சிறப்புக் குன்றியதோ அது போன்று ஐரோப்பிய மொழியினுலும் தமிழ்ச் சிறப்புக் குன்றியது. நம் தமிழர்களே அதனை விரும்பிப்படித்தனர். அதனை வலிய தேடி எழுதினர்.

ஸ், ஷ், ஜ் என்ற எழுத்துக்கள் வட மொழியினர்க்கு உச்சரிக்க மிகுந்த பழக்கமுண்டு. அதுபோன்று ஐரோப்பியர்கட்கும் உண்டு. அப்படிப்பட்ட மொழியைத் தமிழில் எழுதும் பொழுது அம்மொழியின் சொற்கள், எழுத்துக்கள் நம் மொழியில் கலவாமல் இருப்பது எங்ஙனம்?

ஆனுல் தமிழ் மொழியிலுள்ள, ஒரு குறிப்பிட்ட சொற்கள், எழுத்துக்கள் வட மொழிக்குப் போயிருக்கலாம். ஆனுல் மகரழகரம் போன்ற எழுத்துக்கள் வடமொழிக்கோ, வேறு எந்த மொழிக்கோ போயிருக்காது.

நேரு பெருமகனுர் சிதம்பரம் கூட்டத்தில் பேசியபோது "கழகம்" என்ற சொல் தமக்கு நுழைவதில்லை என்று கூறினுர். இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டுவதென்ன? நம் மொழியிலுள்ள மகரழகரம் வட மொழிக்குப் போகவில்லை என்பது தானே?

நம் மொழியைச் செம்மை மொழியாக்கியதே இந்த மகரழகரம் தானே!

நேரு பெரு மகனுர் அவர்களாலேயே உச்சரிக்க முடியாவிட்டால் மற்றவர்களால் எங்ஙனம் சொல்ல இயலும்?

பெருமை வாய்ந்த நம் மொழியில் எப்படியோ ஒரு காலத்தில் வடமொழிவந்து புகுந்துவிட்டது. அம்மொழியை அரசாங்கமே புகுத்தியது. அரசின் ஆதரவு இல்லாவிட்டால் எம்மொழியும் சிறப்படையவும் முடியாது. சீர் பெறவும் முடியாது. குறிப்பாக எடுத்துச் சொல்லவேண்டுமென்ருல் வட மொழிக்குச் சந்திர குப்தனுடைய முழு ஆதரவும் இருந்தது. சந்திர குப்தன் காலம் கி. மு; 322—185 அவன் காலத்திலேயே தான் பக்தி நெறியும், வட மொழியும் புகுந்தது என்பது ஆராய்ச்சியாளரின் கருத்து.

இப்பொழுது புகும் இந்தி ஒரு சமயம் நம் நாட்டில் நுழையும் இந்தியாக இருந்தது. நுழையும் இந்தியாக இருந்த அம்மொழி; இப்பொழுது புகுமொழியாகிவிட்டது. நுழைவது என்பது சிறு துவரத்தின் வழியே செல்லுதல் என்பது. புகுதல் என்பது ஒரு பெரிய கோட்டை வாயிலில் செல்லுதல் என்பது. தமிழகக் கோட்டை வாயிலைத் திறந்து போட்டு இருக்கிறது; அம்மொழி புகுவதற்கு இந்திய அரசினரால்.

இந்தி மொழிக்குக் குடியரசு ஆதரவு மிகுந்து இருப்பதால் தான் நாம் அவ்வாறு கூறுகின்றோம். அரசு ஆதரவினால் தான் நம்மவர் மீது இந்தி ஆதிக்கம் செலுத்த முன் வருகிறது.

ஒரு மொழி வளர்ச்சிக்கு அரசின் ஆதரவு வேண்டும் என்று கூறினோம். அரசின் ஆதரவு இல்லாத எம்மொழியும் சீர் பெருது என்பதற்கு உறுதியாக ஒன்று கூறுகின்றோம். கேளுங்கள்.

திருவிதாங்கூர் பல்கலைக் கழகத்திற்குத் திரு. அழகப்பச்செட்டியார் அவர்கள் ஓர் இலட்சம் ரூபாய் நன்கொடையாக கொடுத்தார். அதைத் திரு. சர். சி. பி. இராமசாமி அவர்கள் வட மொழிக்குக் கொடுத்துவிட்டார்.

இதை அறிந்த பின்னும் தமிழ் மகனுக்கு மதி பிறக்க வேண்டாமா? இனியும் எத்தனை நாள் இப்படியே வாளா இருப்பான்?

வட நாட்டரசர் மட்டுமல்ல, தென்னாட்டு அரசரும் வட மொழிக்குத் துணையாய் நின்றனர். அதன் கேடு நாம் இப்பொழுது அனுபவிக்கின்றோம். தண்டியலங்காரம் என்னும் அணி இலக்கண நூல் வட மொழியிலுள்ள "காவ்யாதர்சம்" என்ற நூலைத் தழுவியது தான் என்று அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

சோழப் பேரரசு காலத்தில் தான் சிந்தாமணியும், சூளாமணியும் யசோதர் காவியமும் இராமயாணமும் வெளிவந்தது.

மணிப்பிரவாள நடையைத் திரு வேதநாயகப்பெருமகனார் தம் நூலில் பரக்க எழுதியுள்ளார். அதில் ஒன்றினை அப்படியே தருகிறேன் படியுங்கள்.

"இங்கிலீஸ், பிரஞ்சு, முதலிய பாஷைகளைப் படிக்க வேண்டாமென்று நாம் விளக்கவில்லை. அந்த ராஜ பாஷைகளில் அநேக அருமையான கிரந்தங்கள் இருக்கிறபடியால் அவைகளைப் படிக்க அறிவு விசாலிக்கும் என்பது திண்ணமே. ஆனால் மாதா வயிறு பற்றி எரிய மகேசுவர பூசை செய்வது போல சொந்த பாஷைகளை மட்டும் படிப்பது தகுதியின்மை அல்லவா?"

திரு. வேதநாயகப் பெருமகனார் அவர்கட்குத் தமிழ் மொழி மீது அளவு கடந்த அக்கரை இருந்த போதிலும், அவர் தம் காலத்தில் மணிப்பிரவாளம் தலை தூக்கி நின்ற தின் காரணமாகத்தான் அவ்வாறு எழுதியுள்ளார்கள். திரு: பிள்ளை அவர்கள் தற்போது உயிருடன் வாழ்ந்திருப்பாராயின் இப்போழுது வேண்டப்பெறும் தனித் தமிழைப் பேசியும் எழுதியும் இருப்பார். ஆயினும் அவர் தம் மொழிப் பற்று நம்மவர்கட்கு வேண்டுமென்பது அவர் கூறியதை அறிந்தவர் அறிவார்கள்.

நம் அருமைத்தாய் மொழியின் சொற்களை வஞ்சகநெஞ்சுடைய ஆரியர்கள் களவாடி வடமொழியில் கலந்து கொண்டு வட மொழியிலிருந்துதான் இந்தச் சொற்கள் தமிழில் வருந்திருக்கின்றன என்று போலி நாடகம் ஆடிவிடுவதையும் நம்மவர்கள் அறிதல் வேண்டும். வடவர்கள் நம்மைத் திட்டியதை அடுத்து வரும் பாகத்தில் காண்போம். ஆனால் அம்மொழி நம்மவர்கட்கு ஆதியில் ஓர் அந்நிய மொழியான வட மொழிக்கு நடு அரசு செலவழித்துள்ள தொகையின் புள்ளி விபரம் அடுத்த பாகத்தில் காண்போம்.

இனி இந்தி மொழியைக் கவனிப்போம்.

இந்தியைத் திணிப்பதற்கு ஒரு காலத்தில் பலவித சர்ச்சைகள் இருந்தது. அதாவது இந்தியா ஒருநாடு. அதற்கொரு தேசிய மொழி. அம்மொழி இந்தி. அதைத் தமிழர்களிடம் எப்படித் திணிப்பது? விருப்பப் பாடமாகவா? அல்லது கட்டாயப் பாடமாகவா? எவ்வாறு? ஆசைக் காட்டியா? அச்சமுட்டியா! என்ற சச்சரவுகளே தவிர அது நமக்கு வேண்டாமென்பதல்ல. இதனைத் தமிழ்நாட்டரசினர் வடவர்களிடம் கூறியிருந்தால் இந்தி மொழி நம் நாட்டிற்கு வந்திருக்காது. இன்று அரசியல் மொழியாகவும் ஆகியிருக்காது.

இந்தி மொழி எப்படி ஆட்சி மொழியாக்கப்பட்டது தெரியுமா? காங்கிரசுக் கட்சிக் கூட்டத்தில் இந்தி மொழியை

ஆட்சி மொழியாக்குவது பற்றிய தீர்மானம் விவாதிக்கப் பட்டது முதலில். அப்படி விவாதிக்கப்பட்டக் கூட்டத்தில் இந்தி மொழி ஆட்சி மொழியாகக் கூடாதென்று வாக் களித்தவர்கள் 78 பேர். இந்தியை இந்தியாவின் ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று வாக்களித்தவர்களும் 78பேர். ஆனால் அன்றைய கூட்டத்தில் தலைவராக இருந்த காலஞ் சென்ற திரு. இராசேந்திர பிரசாத் அவர்கள் "ஒருவாக்கு" அளித்ததால் அத்தீர்மானம் நிறைவேறியது. இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளுவது என்ன? இந்தி மொழிக்குக் காங்கிரசுக் கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு இருந்தும், தீர்மானம் நிறைவேறிற்று. அப்பொழுது அவ்வாறு நிறைவேறியதால்-அது அரசியல் நிர்ணய சபையில் நிறைவேறியதால், இன்று எத்துணைக் கோடிக்கணக்கான மக்கள் அம்மொழியால் அவதியுறும் நிலை எய்தினர் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஒரு மனிதர்க்கொடுத்த வாக்கு இன்று நம் நாட்டவர் களைத் துன்புறுத்துகிறது. அத்தனி மனிதர் யார்? இந்தியா வின் தனிப்பெருந் தந்தையாக — இந்திய மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டவர் தயவைப்பெற்ற மொழி நம்முடைய உயிரை வாங்க முழுத்திரு உருவம் பெற்றுள்ளது. அதை முறியடிக்கும் முழுப் பொறுப்பும் முதியவர்களிடமும் முறுக் கேறிய வாலிபப் பட்டாளங்களிடமும் உளது. ஆதலால் தமிழ்ப் பெருங்குடியினரே! நீங்கள் உங்கள் கடமையைச் செய்ய ஆயத்தமாகுங்கள்!

இந்தியைப் பற்றிச்சிலர் திருவாய் மலர்ந்தருளியுள் ளார்கள். அவர்களுடைய கூற்றினைக் கவனிப்போம்.

திரு: டி. டி. கே; அவர்கள் நடு அரசில் நிதி அமைச் சராகப் பணியாற்றியபோது கூறியதாவது:-

"எந்த மொழியாக இருந்தாலுஞ் சரி அந்த மொழி எந்த வட்டாரத்தில் பெருவாரியாகப் பேசப்படுகிறதோ அந்த வட்டாரத்திலேயே நாம் நிலையாக வாழ்ந்திருந்தாலுங்கூட அந்த மொழியைச் சரியான முறையில் கற்றுக்கொள்ளு வதில் பல வகையான சங்கடங்கள் ஏற்படத்தான் செய்யும். இந்த விதி ஏனைய மொழிகளை விட இந்தி மொழிக்கு மிகமிகப் பொருந்தும். உதாரணத்திற்கு என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். தில்லியிலும், வட இந்தியப் பகுதிகளிலும் சென்ற பத்தாண்டுகளாகத் தொடர்ந்து இருந்திருக்கிறேன்-

இருந்து வருகின்றேன். என்றாலுங்கூட என்னால் இன்றைய தினம் வரையில் இந்தியைப் பேச முடியவில்லை. இத்தனைக் காலம் வட இந்தியாவில் இருந்துங்கூட பிறர் இந்தியில் பேசினால் அதைப் புரிந்து கொள்ளுகிற அளவிற்குத்தான் என்னுடைய இந்திமொழி அறிவு இருந்து வருகிறதே தவிர, நானே இந்தியில் பேசுவது என்பது என்னால் இன்னும் முடியவில்லை. 10 ஆண்டுகள் வட இந்தியாவில் இருந்த எனக்கே இந்த நிலை என்றால் வட இந்தியாவையே அறியாத தென்னிந்தியர்களால் இந்தி மொழியை எப்படி விரைவில் கற்றுக் கொள்ள முடியும்?''

இந்தி மொழியைப் பொது மொழியாக—ஆட்சி மொழியாக ஆக்கியோர் இதைக் கவனிக்க வேண்டாம். இங்குள்ள நம்மானோர்கட்குத் தக்கச்சான்றாக அமையப் பெற்றது அமைச்சரின் கூற்று. இந்தி மொழியை அவரைப் போன்றவர்களாலேயே கற்றுக்கொள்ள முடியவில்லை என்கின்றபோது நம்மவர்கட்கு அதுவும் தமிழே நன்கு அறியாதவர்கட்கு எங்ஙனம் கற்க இயலும்? சிந்தியுங்கள்.

5—10—1949—இல் அரிசன் இதழில் காந்தியடிகள் கூறியது:-

“மாகாணங்களுக்கிடையே பேசுவதற்கான பொது மொழி ஒன்றை யூனியன் கொள்ள வேண்டும். நான் ஒரு படி மேலே சென்று கூறுவதனால் இரண்டு பகுதிகட்கும் (இந்தியா—பாக்கிசுதான்) இந்துத்தானியே தங்கட்குப் பொது மொழியாகக்கொள்ளல் வேண்டும்.''

“அவர்கள் இரண்டு வித வரி வடிவங்களையும் (உருது, தேவநாகரி) கற்றுக்கொள்ளல் வேண்டும். இந்திய யூனியனிலுள்ள இந்துகட்கும் முசுலீம்கட்கும் இது ஒரு சோதனையாகும்.''

காந்தியடிகள் வழிப்படியே நாங்கள் நடக்கின்றோம் என்று கூறும் அரசியலார் அதன்படி நடக்கின்றார்களா?

காந்தியடிகளே கூறியிருக்கிறார் ''இந்தியாவின் பொது மொழி இந்துத்தானிதான்'' என்று. ஆனால் இன்று அரசாங்கம் இந்தியை ஆட்சி மொழியெனக் கூறுகின்றது. தவிரவும் நம்மவர்கட்கு இம்மொழிப் பிரச்சனைப் பெரிய சோதனை என்றும் கூறுகின்றார் என்றுதான் தொலையுமோ இந்த மொழிப் பிரச்சனை?

மேலும் காந்தியடிகள் கூறியிருக்கின்றார்:— "ஆண், பெண் அனைவருமே இந்தி கற்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. வடநாட்டு மக்களோடு தொடர்புகொண்டுள்ளவர்கள் மட்டுமே இந்தி கற்றுக்கொண்டால் நான் திருப்தியடைவேன்.........பிற மாகாணங்களிலுள்ளவர்கள் அனைவருமே இந்தி கற்பதை நான் வரவேற்கிறேன். இப்படி ஒரு காரியம் நிகழ்வது சாத்தியமில்லை என்பது போகூழால் முற்றும் உண்மையாகவே இருக்கிறது."

"எல்லாருமே இந்தி கற்றுக்கொள்ளல் வேண்டுமென்ற பிரச்சனை எழவே இல்லை. சரியாகச் சொன்னால் எல்லாருமே இந்தியைக் கற்றுக்கொள்ள மாட்டார்கள். தொண்டு செய்வதில் விருப்பம் உள்ளவர்கட்கும், பிரயாணம் செய்பவர்கட்குமே இந்தி தேவைப்படும்."

"நமது மொழிப் பிரச்சனை" என்ற நூலின் கண்ணே காந்தியடிகள் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்கள். காந்தியடிகளைக் குருவாக ஏற்றுக்கொண்டவர்கள் அவர்தம் கூற்றினைக் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

"இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத ஏனையோர் இந்தி மொழியைக் கற்றுத் தேர்ச்சிப் பெறுதல் இயலாது."

காசியிலிருக்கும் இந்து பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு: கே. ஆர். பிசுரோத்தி, எம். ஏ, அவர்கள் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

இந்தியை விழையும் அருமைமிகு நண்பர்கள் மேற்கூறியவர் கருத்தை நன்றாகக் கவனிக்கவேண்டும்.

"இந்தி பேசாத மக்கள் மீது இந்தியைக் கட்டாயமாகத் திணிக்க எண்ணினால் இந்தி ஒருபோதும் இந்தியாவின் தேசியமொழியாகிவிடமுடியாது."

நடுஅரசு அமைச்சர், டாக்டர் கேசுகர் வங்கத்தில் பேசியது; 28—8—1955-இல்.

டாக்டர் கேசுகர் நடு அரசில் ஓர் அமைச்சர். அவர் கூறியிருக்கிறார், இந்தியைக் கட்டாயமாகத் திணிக்கக்கூடாதென்று. இருந்தும் இன்று இந்திமொழி அரியாசனம் ஏறி வீற்றிருக்கிறது.

"இந்தியா போன்ற நாட்டுக்கு ஒரு பொது மொழியை வைத்துக்கொள்வதென்பது இயலாததாகும். சென்ற மூன்

றுண்டுகளில் ஓர் உண்மைப் புலப்பட்டிருக்கிறது. இந்தியா ஒரு தேசிய மொழியுடையதல்ல. இந்தியா தேசியமொழிகளுடையது என்பதாகும். இந்தியாவுக்கு ஒரு பொதுமொழி இருக்க முடியாது. கட்டாயம் என்றால் அதற்கு எதிர்ப்பு கிளம்பும். சட்டமூலம் ஒரு மொழியை உருவாக்க முடியாது."

இது திரு: வி. கே. கிருட்டிண மேனன் அவர்கள் சென்னை உட்லண்டுசு விடுதியில் பேசியபோது குறிப்பிட்டது.

"இந்தி மொழி ஆட்சிச் சட்டம்" இனி செல்லாத காசு தான் என்று கூறவும் வேண்டுமோ?

"தாய் மொழி அல்லாத இதரவேறு ஒரு மொழியைக் கற்றுக்கொள்வதிலுள்ள சுமை, துன்பம், எல்லா மொழி பேசும் மக்கட்குப் பொதுவானதாகும்."

இவ்வாறு பேசியது — திருவாய் மலர்ந்தது வேறு யாரும் இல்லை. காலம் சென்ற பாபு அவர்கள் தாம்.

அதே பாபுதான் அம்மொழியை அரியாசனத்தில் அமர்த்தப் பாடுபட்டார் என்பதை மறந்துவிடக்கூடாது.

அடுத்தொருவர் கூறும் கூற்றினையும் கவனிப்போம்.

"இந்திமொழித் தழைக்கவேண்டுமென்றால் தமிழ் நாட்டில் தமிழே ஆட்சி மொழியாகவேண்டும்"

இது திரு: காகாகலேல்கர் அவர்கள் கூறியது. ஆனால் நீண்ட நாட்கட்கு முன் கூறியது. இப்பொழுது நாம் கூறுகின்றோம் இந்தியாவிற்குத் தமிழை ஆட்சிமொழியாக்க வேண்டுமென்று.

இந்தியைக் கல்லூரிகளில் கற்பிக்கும் மொழியாக ஆக்க வேண்டுமென்று கூறப்பட்டது. இது குறித்துக் கூறியவர்களின் கூற்றினைக் கவனிப்போம்.

"இந்தியா முழுவதும் கல்லூரிகளில் இந்தி மொழியையே கற்பிக்கும் மொழியாகக்கொண்டு பாடங்கள் கற்பிக்க வேண்டுமென்ற கருத்து வெளியிட்டதின் விளைவாகத் தான் தென்னிந்தியாவில் பல்கலைக் கழகங்களில் தமிழ் அல்லது தெலுங்கு இவற்றின்மூலம் பாடங்கள் கற்பிக்கப் படவேண்டுமென்ற கோரிக்கை எழுந்தது."

திருப்பதி வெங்கடேசுவர பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு: கோவிந்தராசுலு அவர்கள் மதுரையில் பேசும்

பொழுது குறிப்பிட்டார்கள். ஆம்; அவர்கள் சொல்லுவது முற்றிலும் உண்மை. இதை அரசியலார் உணரவேண்டும்.

"தென்னாட்டவர் மீது இந்தி மொழியைக் கட்டாயமாகத் திணிப்பார்களேயானல் தென்னாட்டவர்கள் தமக்குத் தரப்படும் பட்டங்களை யெல்லாம் மறுப்பதற்கு ஒரு சிறிதும் தயங்க மாட்டார்கள்" என்று திரு: மயிலை சிவமுத்து அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆதலால் தமிழ்ப் பெருங்குடி மக்களே! உங்கட்கு இதற்கு முன் நடு அரசு தந்துள்ள பட்டங்களைத் துச்சமென எடுத்தெறியுங்கள். அப்படி எடுத்தெறிந்து தமிழர் தம் பேரன்பும், பெருமதிப்பும் பெற்றுப் பெருமகிழ்வு பெறுங்கள்.

இந்தியாவின் தேசிய மொழியெனக் குறிப்பிட்டுள்ள அரசியல் சட்டப் பிரிவில் வடமொழியிலிருந்து பல சொற்களை எடுத்துக் கையாளலாம் என்று கூறப்பட்டுள்ளது. சிந்தி மொழியினர் இதைச் சுட்டிக்காட்டி சிந்திமொழி பிரகிருத மொழியுடன் நெருங்கிய தொடர்புடையதென்றும் சிந்தி மொழியை அரசியல் சட்டம் ஒப்புக்கொண்டால் இந்தி மொழியின் வளர்ச்சிக்கு நல்ல பயன் ஏற்படுமென்று பம்பாயில் சிந்தி மொழிப் புலவர்கள் கூறினார்கள்.

சிந்திக்காரன் கூற்றைக் கேட்டபின்னும் தமிழ் மகனுக்கு மதிபிறக்கவேண்டாமா?

இந்தியாவில் எங்குப் பார்த்தாலும் மொழிச் சண்டை நெடுநாளாக இருந்து வருகிறது. மராத்திய மொழியினர்க்கும், குசரத்தி மொழியினர்க்கும் மொழித் தகராறு. அது போன்று பஞ்சாப்பில் உருது மொழியினர்க்கும், குர் முகி மொழி பேசுபவர்கட்கும் மொழித் தகராறு இருந்துவருகிறது. இது போன்று தென்னாட்டிலும் தமிழ்மொழிப் பேசுபவர்கட்கும், வடமொழி பேசியவர்கட்கும் நீண்ட நாட்களுக்கு முன்பே தாவா இருந்தது. ஆனல் இப்பொழுது வடக்கிருக்கும் இந்திக்காரர்கட்கும், நமக்கும் தாவா. இந்தத் தகராறுகளும், தாவாக்களும் எதில் கொண்டு விடுமோ?

"பணித்தேர்வு மொழியாக இந்தியுடன் ஆங்கிலமும் இருத்தல் வேண்டும். இன்றேல் தென்னாட்டவர் நலன் பாழாகும்."

இவ்வாறு சென்னைப் பல்கலைக் கழகத்தின் சிண்டிக்கேட் கூறியது. ஆனல் இன்று நடந்ததென்ன ?

குசராத்தி வித்தியா பீடத்தின் காந்தி நூல் நிலையம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் பண்டித நேரு பெருமகனார் குறிப்பிட்டுள்ளார்; — "ஆங்கிலத்திற்கு அகில உலகில் இருக்கும் முக்கியத்துவம் மட்டுமின்றி நம் சொந்த நலனையும் கவனிக்கவேண்டும். நாம் வெளிநாட்டு மொழிகளைக் கற்பதைக் கைவிட்டால் முன்னேற்றப் பாதையில் பின்தங்கியவர்களாவோம். ஆங்கிலம் மட்டுமல்ல, ஜெர்மன் பிரெஞ்சு, இரசியா, சீனமொழி முதலிய பல மொழிகளைக் கற்பிக்க நாம் ஊக்கமளிக்க வேண்டும். இம்மொழிகளின் வாயிலாகத்தான் நாம் உலகத்தை இன்னும் நன்றாக அறிய முடியும்."

ஆங்கிலத்தின் அவசியத்தை நேரு பெருமகனார் கூறியதை இங்குள்ளவர்கள் அறிதல் நலம் தூய்ப்பதுதானே!

ஆனால் நேரு பெருமகனார் அவ்வாறு பேசினாலுங்கூட மேற்கத்திய நாடுகளுக்கோ, வேறு பல நாடுகளுக்கோ சென்றாலுஞ்சரி, இந்தியில் பேசுவதும், இந்தி மொழியில் கையெழுத்திடுவதுமாக உளர். இஃது எதைக் காட்டுகிறது? தன் மொழிக்குச் சிறப்புத் தருகின்றார் என்பதுதானே!

தமிழ்நாட்டில் பிறந்து தமிழ்ப் பெருங்குடி மக்களிடையே வாழ்ந்து தமிழ் மண்ணிலே சாகும் தமிழன் ஆங்கிலத்தில் கைச்சாற்றிடுகின்றான் என்றால் இதைவிட என்ன கேவலம் வேண்டும்?

ஆங்கிலேயர் நாட்டிலே வளர்ந்து ஆங்கிலேயர்களிடையே பழகி, ஆங்கிலேயர்களாலேயே, மதிக்கப்படும் அலகாபாத்து அறிஞர் பெருமகனாராம் நேரு பெருமகனார், ஆங்கிலமொழி அவசியம் என்று குறித்துப் பேசிவிட்டுத் தம் செயலில் தம் மொழிக்குச் சிறப்புத் தருகின்ற தன்மையைக் கண்டபின்பும் தமிழ் மகன் தமிழில் கைச்சாற்றிடாமல் ஆங்கிலத்திலும், அயல் மொழியிலும் கைச்சாற்றிடுகின்றான் என்றால், தமிழ் தாய்க்கு இதைவிட என்ன இவர்கள் தீங்கு செய்யவேண்டும்?

நடு அரசு அமைச்சர் திரு: டி. டி. கே; 8-7-55-இல் கோவை சோசியல் கிளப்பில் பேசினர். அதாவது "இந்தி திணிப்பால் நம் நாட்டில் குழப்பம் தான் ஏற்படும். இந்தி திணிப்பில் நிதானமாக நடந்துகொள்ளல் வேண்டும்" என்று பேசினர். தயவுசெய்து இந்தியைத் திணிப்பவர்கள் திரு: டி. டி. கே; அவர்கள் கூற்றையும் சிறிது எண்ணிப் பார்க்கவேண்டும். நாட்டில் வீணாகக் குழப்பத்தை உண்டு பண்ணாதீர்கள்.

"இந்தி மொழியை மக்கள்மீது திணிக்கும் பிரச்சனேயே இல்லே."

பூரியில் அகில பாரத தலைமை மொழிச் சம்மேளனம் ஆருவது ஆண்டு விழாவில் பேசியபோது திரு: கேசுகர் குறிப்பிட்டார். ஆனல் இன்று இந்தி ஆட்சிமொழி. அமைச்சர் கூறியது வெறும் வாய்ப்பேச்சாக ஆயிற்று என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். "வாய்ச்சொல் வீரரடி" என்று பாரதி கூறியது இவர்களைப் போன்றவர்களைக் கண்ணுற்று தானே!

"இந்தி மொழி பாராளுமன்றத்தில் ஆதிக்கம் கொண்ட ஒரு மொழியாக ஆகிவிட்டது."

இவ்வாறு திரு: மாவ்லங்கர் கூறியுள்ளார். நாம் வடவர்களேயும், அவர் தம் ஆட்சி மொழியான இந்தியையும் ஆதிக்கம் கொண்டதென்று கூறினல் இங்குள்ள ஏனே தானேக்கள் ஏதெல்லாமோ பேசுகிறது. ஆனல் திரு: மாவ்லங்கர் குறிப்பிட்டுள்ளார், இந்தி ஆதிக்க மொழியென்று. அவ்வாறு ஆதிக்கம் புரியும் மொழி நமக்குத் தேவைதான? தமிழா சிந்தித்துப் பார்!

"நமது அரசியல் சட்டத்தில் இந்தியைத் தேசிய மொழியாக ஏற்றுக்கொண்டிருக்கின்ருேம்; அதைப்பற்றித் தகராறு எழுப்புவதில் எந்தவிதப் பயனும் இல்லே."

இவ்வாறு சென்னே உயர் நீதிமன்றத்தின் நீதிபதி திரு: கே. இராமசாமி அவர்கள் அண்ணுமலேப் பல்கலேக் கழகத்தில் பேசியபோது குறிப்பிட்டுள்ளார்.

கனம் நீதிபதி அவர்கள் ஒன்றினே மறந்துவிட்டார்கள். அரசியல் சட்டம் 14 மொழிகள் தேசிய மொழிகள் என்று குறிப்பிட்டிருக்கிறது. 14 மொழிகளில் நமது தாய்மொழித் தமிழும் ஒன்று. தேசிய மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று என்ருல் நம் மொழியை இந்தியாவின் ஆட்சிமொழியெனக் கொள்ளட்டுமே. தமிழை எப்படி இந்தியாவின் ஆட்சி மொழியெனக் கொள்ள மாட்டார்களோ, அது போன்று நாம் இந்தியை ஆட்சி மொழி என்று ஏற்க மறுக்கின்ருேம். தவிரவும், இந்தியை இந்தியாவின் தேசியமொழி என்று யாரோ ஒரு சாரர் ஒப்புக்கொண்டார்கள் என்பதற்காக நாம் (தமிழ்பெருங் குடியினர்) அதை ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும், அது இந்தியாவில் வாழும் கோடிக்கணக்கான மக்களும் ஒப்புக்கொள்ளல் வேண்டுமென்று கனம்

நீதிபதிகள் போன்றவர்கள் கூறத் தலைப்பட்டு விட்டார்கள் என்றால் அப்புறம் இந்த நாட்டில் இந்தி எந்த அளவுக்கு ஆட்சிபுரியும்? அது அரசியல் அறநெறியை எந்த அளவிற்கு பாதுகாக்குமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

கனம்: நீதிபதி அவர்கள் இந்தியை எதிர்ப்பவர்கள் தகராறு செய்வதாகக் கூறுயிருக்கின்றார்கள். இந்தியை எதிர்ப்பவர்கள் தகராறு செய்பவர்கள் அல்ல. தாவா செய்கின்றார்கள். இந்தியை தாவாவுக்கும் தகராறுகட்கும் வேறுபாடு உளது என்பதை அறிதல் நலமாகும்.

சொல்வளம், கருத்துவளம், இலக்கண, இலக்கிய வளங்கள்—இவற்றில் ஏதேனும் ஒன்றுக்குத் தமிழ் மொழியிலிருக்கும் பெருமை கூட இந்தி மொழிக்குத்தர இயலாது. அத்தகைய மொழிக்கு இலட்சக்கணக்கில் நடு அரசு செலவழித்துள்ளது. அதாவது 1954ஆம் ஆண்டு வரை இந்தி மொழிக்கென செலவழித்தத் தொகை 12 இலட்சம். ஆனால் தமிழ் மொழிக்கென செழவழித்தத் தொகை என்ன? 1954 ஆம் ஆண்டு வரைச் செலவழித்தத் தொகை இங்குக் குறிப்பிடப் பெறவில்லை. செலவழித்தத் தொகையின் புள்ளி விபரம்:—

வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கட்கு இந்தி மொழியைக் கற்றுக்கொள்வதற்காகச் செலவழித்தத் தொகை (1950 இல்) 50,000. இதோடு இந்தியைச் சொல்லிக்கொடுக்க வெளிநாடுகளுக்கு ஆசிரியர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்:

ஆக்சுபோர்டு பல்கலைக்கழகம், கேம்பிரிட்சு பல்கலைக்கழகம், துர்காம் பல்கலைக்கழகம், ஆகியவற்றிற்கு இந்திப் புத்தகங்கள் நன்கொடையாக நடு அரசு கொடுத்திருக்கிறது. ஆனால் நடு அரசோ, மாநில அரசோ நம் தமிழ் மொழியிலிருந்து ஒரு நூலாவது நன்கொடையாகக் கொடுத்திருக்கிறதா?

இந்தியில் நல்ல புத்தகங்களுக்கு ஆண்டு தோறும் பரிசு வழங்கப்பெறுகிறது. 1950 வரை ரூபாய் 24 ஆயிரம் பரிசு கொடுத்திருக்கிறது. அதன் பின்னருள்ள கணக்கு வேறு இருக்கிறது.

திரு: மகனலால் சதுர்வேதி அவர்கள் எழுதிய "கிமதரங் கணி" என்ற நூலுக்கு ரூபாய் 5,000 பரிசு தரப்பட்டிருக்கிறது. நடு அரசினரால் நம் தமிழ் மொழியிலுள்ள எந்த நூலுக்காவது இவ்வளவு பெரிய தொகையைக் கொடுத்துள்ளதோ? தமிழனே சிந்தித்துப்பார்!

இந்தியாவெங்குமுள்ள குழந்தைகளுக்காக—நூல் நிலையங்களில் வைக்கப்பெறுவதற்காக 25 இந்திப் புத்தகங்கள் எழுதப்பட்டு, அதில் இலட்சக்கணக்கானப் பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளது. இதற்கான செலவு ரூபாய் 62,500.

1955 - லிருந்து 1959 வரை ஐந்தாண்டுகட்கும் ரூபாய் 26,000 வீதம் மான்யமாக காவிநாகரிப் பிரச்சார சபைக்குக் கொடுத்திருக்கிறது நடு அரசு. நம்மொழிக்கென்று என்ன மான்யம் வழங்கியிருக்கிறது? தமிழனே சிந்தித்துப் பார்!

ஐதராப்பாத்து இந்திப் பிரச்சாரச்சபைக்கு 1954, 1955, இல் தரப்பட்ட உதவி மான்யத் தொகை ரூபாய் 42,000. நம் தமிழ் மொழிக்கு என்ன செலவழித்திருக்கிறது? தமிழ்ப் பெருங் குடிமகனே! சிந்தித்துப்பார்!

இந்தி அகராதித் தொகுப்புக்கு அலகாபாத்து இந்துத்தான் பிரச்சாரச் சபைக்கு ஓர் இலட்சமும், அதே சபைக்கு பிற ஓர் அகராதித் தொகுப்புக்கு ரூபாய் 60,000 மும், கொடுத்திருக்கிறது நடு அரசு.

ஆங்கில—இந்தி அகராதித் தொகுப்புக்கு அலகாபாத்து இந்தி சாகித்திய சம்மேளனத்திற்கு ரூபாய் 60,000 கொடுத்திருக்கிறது நடு அரசு. நம் அருமை மொழிக்குச் செய்ததென்ன?

பல்கலைக் கழகங்கட்கு இந்தி மொழி அபிவிருத்திக்காகப் பல இலட்சம் ரூபாய் நடு அரசு கொடுத்திருக்கிறது. ஆனால் இதில் நம் நாட்டுப் பல்கலைக் கழகத்திற்கு ஏதேனும் கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை. எல்லாம் வட நாட்டிலுள்ள பல்கலைக் கழகத்திற்கே கொடுத்திருப்பதாக அறிகின்றோம்.

காசிப் பல்கலைக் கழகத்திற்கு மட்டும் ஆண்டு தோறும் பெரும் தொகை ரூபாய் 12,500. (Recurring) பெறுகிறது. (Nonrecurrng Rs. 25,000.) ஆனால் 1952,53 இல் மட்டும் காசிப் பல்கலைக்கழகம் பெற்ற தொகை ரூபாய் 37.500.

தில்லிப் பல்கலைக்கழகத்திற்கு ரூபாய் 10,000 கொடுக்கப்பட்டது. ஆந்திராவுக்குக் கொடுக்கப்பட்டத் தொகையைச் சமசுகிருத மொழிக்கு ஒதுக்கிக்கொண்டது. மைசூர் மாநிலத்திற்கு ரூபாய் 15,00 தரப்பட்டுள்ளது.

இந்தி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடம் துவங்குவதற்கு மட்டும் அகில பாரத்திய இந்திப் பரிசாதுக்கு 1952,53 இல்

ரூ. 10,000 கொடுக்கப்பட்டிருக்கிறது. பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தொகை இதில் சேர்க்கப்பெறவில்லை.

## பிரச்சார மான்யம்

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திப் பிரச்சார மான்யமாக 11 மாகாணங்களுக்கு 1954, 55 இல் மட்டும் ரூ. 2,79,000 அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இதில் சென்னைக்கு ரூ. 2138 - மைசூர்க்கு ரூ. 76,45 - குடகுக்கு ரூ. 3564 - பாக்கி ரூ. 26,5654 வட இந்திய மாகாணங்களுக்கு. மற்றும் இந்திப் பிரச்சார வேலைக்கு ரூபாய் 35,45,000 கொடுக்கப்பட்டுள்ளது. இதில் சென்னை அடங்கவில்லை. ஆனல் ஐதராபாத்துக்கு ரூபாய் 10 ஆயிரம். மைசூர்க்கு ரூ. 5000 போக பாக்கி ரூபாய் 35,950; வடநாட்டிலுள்ள மாகாணங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

செர்மன், ரோம் ஆகிய நகரங்களிலுள்ள பல்கலைக் கழகங்களுக்கு இந்தி ஆசிரியர் அனுப்பப்பட்டது. ஒவ்வொரு ஆசிரியர்கட்கும் போகவரச் செலவு நீங்கலாக மாதம் ஒன்றுக்குச் சம்பளம் ரூபாய் 250 வீதம் இரண்டு ஆண்டுகள் (1953-54) மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் பின்னுள்ளது இதில் அடங்கவில்லை.

இத்தாலிப் பல்கலைக் கழகத்தில் இந்தித் திறமைக்கு ரூபாய் 1500 தரப்பட்டிருக்கிறது. நேபாளத்திற்கு இந்திப் புத்தகசாலை அமைக்க ரூபாய் 10,000 மதிப்புள்ள இந்திப் புத்தகங்கள் இந்தி (ய) அரசு கொடுத்திருக்கிறது.

1953-ஆம் ஆண்டுகளுக்குப் பின் ஆண்டுதோறும் இந்தி மொழிக்கு பல இலட்சக் கணக்கான ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிற கணக்கு இதில் அடங்கவில்லை.

இந்தி மொழிப் பிரச்சாரக் குழுவில் அங்கம் வகிப்பவர்களும், வெளிநாட்டுக்கு இந்தி மொழி ஆசிரியராகப் பணியாற்றுபவர்களும் வட இந்தியர்களே! இதில் ஒருவர் கூட நம் நாட்டவர்கள் இல்லை.

இந்தி மொழிச் சுருக்கெழுத்துத் தட்டெழுத்துச் செயலில்; 1953-இல் இலக்கனேவில் நடந்த தேவநாகரி எழுத்துச் சீர்திருத்த மாநாடு செய்த பரிந்துரையை இந்திய அரசு ஏற்றுக்கொண்டது. இந்தித் தட்டெழுத்து எழுத்தமைப்பு (Key board) செயலில் அம்மாநாடு அமைந்த குழு செய்த பரிந்துரைகளையும் அரசு ஏற்றுக்கொண்டது.

இந்தி மொழி பேசாத வட்டார மக்களிடையே இந்தியைப் பிரச்சாரம் செய்ய 26000 கலைச்சொற்களைப் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அதன் செலவினங்கள் அனைத்தையும் அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இப்படி இந்தி மொழிக்குச் செலவழித்தது போன்று நம் அருமை மொழிக்குச் செலவழித்தனரா? தமிழர்களே! சிந்திப்பீர்களா?

## இந்திமொழி ஆட்சிமொழியாக முடியுமா?

1953-இல் மத்திய அரசு வரவு—செலவுத் திட்டத்தை இந்தியில் தயாரித்துக் கொடுத்தது; அங்கத்தினர்கட்கு. ஆனால் இந்தியில் தயாரிக்கப்பெற்ற வரவு—செலவு திட்டம் தப்பும் தவறுமாக இருந்தது. அதற்காக அப்பொழுது நிதியமைச்சராக இருந்தவர் சபை அங்கத்தினர்களைப் பொறுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார்.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளுவதென்ன? இந்தி மொழி நம் நாட்டிற்கு ஆட்சி மொழியாக ஆகும் தகுதியில்லை என்பது தானே!

தமிழ்நாடு அமைச்சரவையில் அங்கம் வகித்த கனம் சுப்பிரமணியம் அவர்கள் திருவாய் மலர்ந்ததைத் தொகுத்துத்தர வேண்டுமென்றால் இந்நூல் போதாது. ஆனாலும் அவர்கள் கூறினவற்றில் சில—குறிப்பிடத்தக்கதை இங்கு தர விழைகின்றேன். கனம் சி. சுப்பிரமணியம் இங்கு அப்பொழுது கூறியதெல்லாம் தம் பதவிக்காகத்தான் என்பது இப்பொழுது முற்றிலும் உண்மையாகிவிட்டது.

"இந்தி, இந்தியாவின் தேசியமொழியல்ல" 23-9-55-இல் கனம் சி. சுப்பிரமணியம், இவ்வாறு கூறினார்கள்.

எந்த கனம் சுப்பிரமணியம் இந்தி இந்தியாவின் தேசிய மொழியல்ல என்று கூறினாரோ; அதே கனம் சுப்பிரமணியம் தில்லியில் இன்று அமைச்சராக இருக்கும் அந்த நடு அரசாங்கம் இன்று இந்தியை ஆட்சிமொழியாக ஆக்கிவிட்டது. இதை நம்மவர்கள் உணரல் வேண்டும்.

"அகில இந்திய உத்தியோகங்களுக்கானப் போட்டித் தேர்வுகளில் எழுதுவதற்கு இந்திமொழியை மட்டும் ஒரே மொழியாகத் திணித்தால் அதனைச் சென்னை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது."

28-3-1955 இல் தமிழ்நாடு சட்டமன்றத்தில் கனம் சுப்பிரமணியம் பேசினார். ஆனால் 1960-ஆம் ஆண்டி

விருந்து முதல் நிர்வாக அலுவலாளர்கட்கும் (I. A. S.) மற்றும் இதர எல்லா அகில இந்திய சர்வீசுகளுக்கும் தேர்வுகள் எல்லாம் இந்தி மொழியிலேயே நடத்தப்படுகின்றன.

கனம்: சி. சுப்பிரமணியம் கூறியது வெறும் வாய்ப்பந்தலாகிவிட்டதன்றோ? இதிலிருந்து இவர்களெல்லாம் ஒரு நிலையான மதி படைத்தவர்கள் அல்ல என்பதும் தெரிகின்றதல்லவா? இங்கு.

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்

என்ற வள்ளுவர் கூற்றும் ஒப்பு நோக்குக.

இந்தி மொழியைப் பொறுத்து இவ்வளவும் மற்ருெரு செயலில் ஈடுபட்டபோது நடந்ததைக் கவனிப்போம்.

முதலமைச்சர் மாநாடு நடந்தபோது கனம்: சி. சு; அவர்களும் சென்றிருந்தார். அங்கே தேவநாகரி எழுத்தை ஒப்புக்கொண்டுவிட்டு இங்கு அதற்கு எதிர்ப்பு வந்துற்றபோது கூறினர்கள்: "தேவநாகரியைப் பொது எழுத்தாகக் கொள்ளலாம் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டதேயொழிய அது முடிவானதல்ல." 21-8-1961 இல் சென்னையில் நடந்த சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகக் கூட்டத்தில் பேசியது.

கனம் அமைச்சரவர்கள் தில்லியில் ஒரு பேச்சும் இங்கு ஒரு பேச்சும் பேசினல் அது எதைக் காட்டுகின்றது? அவர் தம்மிடம் நன்னெறி முறைக்கொள்கை இல்லை என்பது தானே! நிலையான மதியுமில்லை. 'சமயத்துக் கேற்றவாறு மாறுவார். அவர் தம்மிடம் தமிழ் பற்று இல்லை. செந்தமிழாம் எம் தமிழுக்கு ஊறு விளைவிக்காதீர்கள். அது ஒவ்வாது. தீதானது, என்று அம்மாநாட்டில் கூறியிருக்க வேண்டாமா?

இந்தி மொழியை கற்பதைத் துரிதப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தபோதிலும், அதைக் கட்டாயப் போதனையாக்குவதில் விரும்பவில்லை."

21-12-1954-இல் தமிழ்நாடு சட்டமன்றத்தில் கனம் சி. சு; அவர்கள் பேசினர்கள். இன்று அம்மொழி ஆட்சி மொழி. இதைக் கனம் சி. சு; சிந்திப்பாரா?

இந்திமொழி பேசாத பகுதிகளில் உள்ள பிரதிநிதிகளின் மாநாடு ஒன்று கூட்டி அந்த மாநாட்டின்மூலம் இந்தி எதிர்ப்பாளர்களின் கருத்தை அறியவேண்டுமென்றும், அதன்

பின்னர் அரசியல் சட்டத்தில் கண்டுள்ளபடி இந்தியைத் தேசிய மொழியாக அனைவருடைய ஒருமித்தக் கருத்துடன் ஒப்பந்தம் ஒன்றுபெற ஏற்பாடு செய்யலாமென்றும், இந்தி மொழி ஆதரவாளர்கள் கருதுகின்றனர்" இப்படி ஒரு செய்தி 1955-ஆம் ஆண்டிலேயே நிலவிவந்தது. அதனை கனம் சி. சு; நடத்தினாரா?

கனம்: சி. சு: அவர்கள் மேலும் கூறினர்:— "இந்தியாவில் இன்று ஏற்பட்டுள்ள மொழிச் சிக்கலைத் தீர்க்கவேண்டுமென்றால்; இந்தியா ஒரு நாடு அல்ல. பல மொழிகள் பேசும் மக்களைக் கொண்ட நாடு என்ற உணர்வை எல்லாரும் பெற்றுத்தீரவேண்டும்."

முதலமைச்சர் மாநாட்டில் பேசவேண்டியதைச் சைவச் சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் விழாவில் வந்து பேசியுள்ளார். இதையெல்லாம் அறிந்த சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்கள் கூறினார்கள்; "இவர்கட்கு அங்கு போனால் கையும் ஓடாது. மூளையும் ஓடாது" என்று. மேலும் திரு. சி. ஆர்; அவர்கள் குறிப்பிட்டார்கள், (19-8-61-இல்)

தமிழ் எழுத்தை யெல்லாம் தேவநாகரி எழுத்தாக மாற்றப்போவதாகத் தில்லியில் முடிவு செய்திருக்கிறார்கள். அதை ஒப்புக்கொண்ட தமிழக அமைச்சர்கள் முணுமுணுத்துக்கொண்டு விட்டார்கள். இவர்களால் எதுவும் செய்ய முடியாது.

நம் அமைச்சர்கட்குத் திரு. சி.ஆர். தந்துள்ள நற்சான்று ஒன்றே போதும். அமைச்சர்கள் நம்மைக் கேலிதான் செய்ய முன்வருவார்களேயன்றி; நம் தமிழகத்தைப் பொறுத்துக் கிஞ்சிற்றேனும் அக்கரை கிடையாது.

தேவநாகரி எழுத்தை நாம் மட்டுமல்ல, அறிவு உலக மேதையாம் திரு: அ. சி. செட்டியார் அவர்கள் கூறியதை நோக்குக.

இந்தியாவிலுள்ள அனைத்து மொழிகளின் எழுத்து முறைகளை யெல்லாம் தள்ளிவிட்டுத் தேவநாகரி வடிவத்தை திணிக்க முயல்வது இந்திய அரசியல் சட்டத்திற்குப் புறம்பான செயல். நாட்டின் ஒற்றுமையை வளர்ப்பதாக போலிக் காரணம் காட்டித் தேவநாகரி எழுத்துக்களைத் திணிக்கும் முயற்சித் தமிழை அழிக்கும் செயலாகும்.

திருக்குறளைத் தமிழ் எழுத்தில் அல்லாமல் தேவநாகரி எழுத்தில் எழுதித் தமிழ் மக்கள் படிக்கவேண்டுமென்ற நிலை

இந்திய நாட்டின் ஒற்றுமையின் பெயரால் உருவாகிக் கொண்டிருப்பதை இந்நேரத்தில் கண்டிக்காமல் இருக்க முடியாது. இந்திய நாட்டு மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சியும், ஒருமை மனப்பான்மையும் வளர்க்கப்பட வேண்டுமென்பது உண்மையாயினும், இந்தியா எல்லா மொழிகளின் எழுத்துக்களை அறவே தள்ளிவிட்டு அம்மொழி களில் எல்லாம் ஒரே எழுத்து முறையைப் பின்பற்றவேண்டு மென்பதும், இந்தி, சமசுகிருதம் ஆகிய மொழிகள் எழுதப் படுகின்ற நாகரி முறைதான் பொது எழுத்து, எழுத்து முறை யாக வருவதற்குத் தக்கது என்றும் கூறுவது பொருந்தாது. 2000 ஆண்டுகளுக்கு முன் இருந்த நூல்கள் அனைத்தும், இப் பொழுதுள்ள தமிழ் எழுத்து முறையில் அமைந்துள்ளன. அந்த நெடுங்கணக்கு முறையை அடியோடு மாற்றிவிட்டு அதற்குப் பதிலாக தேவநாகரி வடிவம் பயன்படுத்துவது தகாது. தேவநாகரி முறை எழுத்து தமிழ் எழுத்துக்கு ஒவ் வாத ஒரு முறை. ஒரு தலைமுறையில் பழைய நூல்களை யெல்லாம் தமிழ் எழுத்தில் படித்த மக்கள் புது எழுத்து முறையினால் திண்டாடுவது ஒருபுறமும், தேவநாகரி எழுத்து முறையில் பயில முற்பட்டுத் தமிழ் எழுத்தில் அமைந்த நூல்களைத் தொடமுடியாத அளவு குருடர்களாகிவிடக்கூடிய குழந்தைகள் ஒருபுறமும், தவித்து நிற்கக் கூடிய நிலைமை உண்டாகும். அரசியல் சட்டம் 29 ஆவது பிரிவின்படித் தமிழ் மொழியும், தமிழ் கலாச்சாரத்தின் உரிமையையும் காப்பாற்றவேண்டும். மேலும் வடக்கு வரிவடிவம் தென் தமிழுக்கு ஒவ்வாது. பன்னெடுங்காலம் பழகிய பைந்தமிழ் எழுத்தைக் கைவிடோம்.

அடுத்து இந்தி இந்நாட்டில் கட்டாயமாகத் திணிக்கப் பட மாட்டாது என்று கூறியவர்கள் பட்டியலைப் படி யுங்கள்.

1. யூனியன் பார்லிமெண்டு சபாநாயகராக இருந்த திரு. மாவலங்கர் அவர்கள்; "இந்தி கட்டாயத்தின் மூலம் நுழைக்கப்படாது" 31-5-55-ல் கூறினார்கள்.

2. "இந்தியைத் திணிக்கவில்லை—திணிக்க மாட்டோம். இந்தி படிக்கும்படி தூண்டி விடுகின்றோமே தவிர கட்டாயப் படுத்தவில்லை." திரு. கந்துபாய் தேசாய் அவர்கள் 25-5-1955-ல் திருச்சூரில் கூறினார்கள்.

3. உத்தியோகத்தை நாடுபவர்களுக்குத் தொல்லை வராதபடிதான் இந்தியைப் பக்குவமாய்ப் பரப்புவோம்"

உதவி போலீசு அமைச்சர் திரு. தத்தா 21-5-1955-ல் கூறியுள்ளார்கள்.

4. இந்தியை மக்கள் மீது கட்டாயப் படுத்தித் திணிக்கும் பிரச்சனைக்கே இடமில்லை. 11-5-1955-ல் திரு. கேசுகர் அவர்கள்.

5. இந்தியை திணிக்க மாட்டோம். தமிழ்நாட்டு மக்கள் தாராளமாக இந்தியில் பயிற்சிப் பெற்று வருகிறவரையில் காத்துக் கொண்டிருப்போம். (அதே முதலமைச்சர் மதுரைக் கூட்டத்தில்.)

6. "தென்னிந்தியா மீது இந்தியைத் திணிப்பது அரசின் நோக்கமல்ல." காலஞ்சென்ற பாபு அவர்கள்.

இவர்கள் அத்தனை பேரும் இவ்வாறு கூறியிருக்க திரு. காமராசு அவர்கள் தற்போது பேசிவருவது ஒரு பக்கமிருக்க; 1955, 1956-ல் பேசி வந்த செய்திகளில் ஒன்றைப் படியுங்கள்.

"ஏன் தமிழர்கள் இந்தியை எதிர்க்கின்றூர்கள் என்று புரியவில்லை." தமிழர்கள் இந்தியை ஏன் எதிர்க்கின்றூர்கள் என்று அமைச்சராக இருந்தவர்க்குப் புரியவில்லை என்றுல்; அவர் நம் நாட்டிற்கு அமைச்சராக இருந்தது எவ்வளவு பெரிய அவமானம்? மேலும் திரு. காமராசு அவர்கள் பேசியது:—

"சுதந்திரம் அடைவதற்கு முந்தியே மாகாத்துமா காந்தி ஒரு பொது மொழி அவசியம் என்று சொன்ஞர். இந்தியாவில் பெரும்பான்மையான மக்கள் இந்தியே பேசுவதால் அதுவே பொது மொழியாக இருக்க லாயக்கானது" என்று அறைகுறை ஆங்கிலத்தில் கூறிஞர். (22-7-56-ல்) இஃது இவ்வாறு நிற்கட்டும்.

இனி நம் தமிழ் மொழியை நம்மவர்கள் எவ்வாறு கூறியுள்ளார்கள் என்பதையும் மேலை நாட்டவர்கள் கூறியதையும் சுவைத்துப் படிப்போம்.

செந்தமிழ், தென்தமிழ், இன்றமிழ், வண்டமிழ், தண்டமிழ், அருந்தமிழ், தீந்தமிழ், உயர்தமிழ், கோதில் தமிழ், தேன் தமிழ் என்றெல்லாம் தமிழ்மொழியைக் கூறுவார்கள். இத்தமிழுக்கு இன்று உறுதுணையாக நிற்பவர் யார்?

"தமிழ் மொழியைக் காக்கத் தமிழன்தான் உறுதுணையாய் நிற்க வேண்டும். ஒவ்வொரு தமிழனும் தனது வாழ்

வில் தினம் ஒரு மணி நேரமாவது தமிழ்நாடு, தமிழ் மொழி, தமிழ் இனம், இவைகளுக்கு ஒதுக்கிச் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்."

ஆம்! இதைக் கூறியது பேராசியர் திரு. சி. இலக்குவனார் அவர்கள். அவர் தம் கூற்றைப் படித்த ஒவ்வொரு தமிழனும் இருந்திட்டால் போதும் நம்மொழியும், நம்நாடும் நம் இனமும் பல்லாண்டு வாழலாம்.

தமிழையே தாய் மொழியாகக் கொண்டு உயிராகக் கொண்டு பெரும்பாலன தமிழர்கள் வாழும் நம் மாநிலத்தில் தமிழையே சரிவரத் தெரிந்து கொள்ளாத மக்கள் நிறைந்திருக்கும்பொழுது தமிழ் நாட்டில் கட்டாயமாக இந்தியைப் புகுத்த வேண்டுமென்ற முறையில் இந்தி மொழியை ஆட்சி மொழியாக்கி அதைப்புகுத்தும் நடு அரசினரையும், மாநில அரசினரையும் நாம் பணிவாகக் கேட்டுக் கொள்ளுவதெல்லாம் விபரிதச் செயலில் ஈடுபட்டுத் தமிழர்தம்மை ஆற்றொன்னுத துயரத்திற்கு ஆளாக்காதீர்கள் என்பதுதான்.

தமிழ் வாணிக்கு நல்லணிச்சூட்டி வர்ணப் படுத்தி கையில் மகரயாழும், பொற்சலங்கையும் பூட்டி தமிழ் நாட்டின் கலையுறக்கம் நீங்க, அழகு துலங்க, இன்பம் விளங்க, வீடு தோறும் கலீர் கலீர் என்று ஆனந்த நடனம் புரியச் செய்வோமாக!

தமிழ் நாட்டின் நல்லிளங்காளைகளோய்! நற் பண்பு மிகு நல்லறிவாளர்களோய்! நம் நாட்டுக் கவிஞர் பெருமக்களில் ஒருவராய்த் திகழும் திரு: சுத்தானந்த பாரதி அவர்கள் வேண்டுகோளும், விண்ணப்பமும் என்ன வென்று அறிந்தீரன்றோ? பின்னும் என்ன உறக்கம்? விழித்தெழுங்கள்! வீறுகொண்டு புறப்படுங்கள்! தமிழ் வாணியை நம் தமிழ் நாட்டின் வீடு தோறும் வீர மங்கையாகத், திகழத் தமிழ் நாட்டின் வீடு தோறும் ஆனந்த நடனம்புரிய அழகு தமிழ்க் கொழிக்கச் செய்யுங்கள். இப்பணியை விடத்தமிழ் மகனுய்ப் பிறந்த தமிழ் இளைஞர்கட்குச் சிறந்தது என்ன இருக்கிறது?

தமிழ் மகனேய்! நீ வாழ்வது தமிழ் மண்ணில். நீ மாண்டு மண்ணோடு மண்ணுய்ப் போவதும் தமிழ் மண்ணில் தான். தமிழ் மண்ணே செந்நிறமாகப் போகட்டுமே! அம் மண்ணில் இனிப் பிறக்கும் அல்லது முளைக்கும் தாவர இனங்களாவது நல்லதமிழ்ப் பேசித் தமிழைப் போற்றிப் புகழட்டுமே! அத்தாவர இனத்திற்கு நீ செய்யும் கைம்மாறு இதுவாக இருக்கட்டுமே! ஆதலால் உன் பணியைச் செய்க!

ஈழம் தந்த பெருமகனர் அனுறிர் திரு. தனிநாயகம் அடிகளின் கூற்றும் ஒப்பு நோக்கத் தக்கதே.

இந்திய வரலாற்று நூல்களை எடுத்து நோக்குமின் "Discovery of India என்றும் History of India Literature" என்றும் பல படபுனைந்து வெளிவரும் ஏடுகளை விரித்துப் படிமின் மாக்சு முல்லர் வின்றர்னிட்சு போன்றவர் முதலாகப் பலரும் வடமொழி இலக்கியத்தின் பெருமையையே விரித்துக் கூறுவர். அவ்விந்திய இலக்கியங்களின் வரலாற்றிலே தமிழ் இலக்கியத்தைப் பற்றியோ திராவிட நாகரிகத்தைப் பற்றியோ ஒரு சொல்லேனும் ஒரு குறிப்பேனும் ஒரு கருத்தேனும் காணக்கிடையா. இந்தியப் பண்பு, இந்திய நாகரிகம், இந்தியக் கலைகள், இந்திய மொழிகள் என அவர் மொழிவனவெல்லாம், திராவிடப் பண்பு, திராவிட நாகரிகம், திராவிடக்கலைகள், திராவிட மொழிகள் இவற்றையே அடிப்படையாகக் கொண்டன. ஆயினும் பல்லாண்டுகளாக நடுநிலை கடந்தோர் பலர் இவ்வுண்மையை மறைத்தும், திரித்தும், ஒழித்தும் நூல்கள் யாத்தமையின் இன்று இவ்வுண்மையை எடுத்துக் கூறுவதும் மக்கள் மனதில் ஐயம் விளைவிப்பதாக இருக்கிறது. அங்ஙனம் எடுத்துக் கூறுவதற்கும் பெரிதும் மனத்துணிவு வேண்டற் பாலயிற்று. தமிழராகிய நாமும் நமது இந்திய மொழிகளிலேனும் தமிழ் மொழியைப்பற்றிய உண்மைகளை இதுகாறும் கூறினேம் அல்லோம்.

திரு. தனிநாயக அடிகள் மெய்வருந்தும் செய்தியைப் படிமின்! நன்ருகப் படிமின்! நம் தமிழ்ச் செய்மையுடையதுதான். அதில் ஐயம் என்ன வேண்டியதிருக்கிறது? இத்தகுச் செம்மொழியைச் சிலர் ஒழிக்க முனைந்தார்கள். ஒரு சிலர் செய்த இக்கேடுதான் நம் மொழிக்கு இன்று இத்தகு இடர் பாடுவந்தது.

இன்னும் நம்மொழியுடன் இந்தியும் வந்து புகுந்தால் நம்மொழி என்ன நிலைமையை அடையும்? தமிழ்ப் பெருமக்கள் நிலை என்ன ஆகும்? நம்மொழியில் புகுந்துள்ள பிற மொழிகள் ஒன்ருு? இரண்டா? பதினெரு மொழிக்கு மேல் நம்மொழியின் கண்ணே வந்து புகுந்துள்ளன. அவை காளாவன;—ஆங்கிலம், பிரெஞ்சு, போர்ச்சுக்கல், தச்சு, சமசுகிருதம், இந்தி, கன்னடம், தெலுங்கு, துருக்கி, அரோபி, சுபானிசு.

இத்தனை மொழியும் நம் தமிழ்மொழியில் கலந்தது போன்று உலகில் வேறு எந்த ஒரு மொழியிலும் கலந்ததில்லை என்று மொழி வல்லுநர்கள் கூறுகின்றார்கள். தமிழ் மொழியில் பிற மொழி கலந்தது விட்டது போன்று வேறு ஒரு மொழியிலாவது தமிழ் மொழி கலந்திடாமல் இல்லை என்று இலண்டன் ஆக்சுபோர்டு இந்தியக் கலை நிலையத்தின் பேராசிரியர் "பர்ரோ" என்பவர் கூறியுள்ளார். மேலும் ஒன்றினையும் பர்ரோ கூறியுள்ளார். சதபத பிராமணம், இருக்கு, வேதம் மகாபாரதம், மகாபாகவதம் முதலிய சமசுருகித நூல்களிலும் பல்வேறு தமிழ்ச் சொற்கள் போய்ச் சேர்ந்திருக்கின்றன" என்று கூறுகின்றனர்.

நம் தமிழ் மொழி அவ்வாறு வேற்று மொழிக்குப் போய்ச் சேர்ந்ததினால், அம்மொழிக்கு நன்மைதான் ஏற்பட்டதே யொழிய; அதனால் அம்மொழிகள் சீன திசை அடையவில்லை என்பதை அறிதல் நலம். ஆனால் வேற்று மொழி நம் மொழியில் புகுந்ததினால் ; நம்மொழிச் சிதறுண்டது என்பதை அறிதல் வேண்டும்.

" தமிழ் மொழி அதன் வளர்ச்சியுடன் இன்று வரையிலும் பாதுகாக்கப்பட்ட ஒரு பழைமையான மொழியாகும். இது வடமொழி, பிரகிருதங்கள், இந்தோ ஆரிய தேசிய மொழிகள், ஆகியவற்றிற்குச் சமமான ஒன்றாக அதன் சரித்திரக்கால முழுவதும் இருந்து வருகிறது. இதற்குக் காரணம் அதன் இயற்கைத் தன்மையில் தமிழ் மொழி இந்தோ—ஆரிய மொழிகளிலிருந்து வேறுபட்ட அன்னியமான மொழியாக இருப்பது மட்டுமன்றி இந்தோ ஆரிய மொழிகளின் இலக்கியங்களுக்குப் பக்கத்திலேயே தமிழ் மொழிக்கென சுதந்திரமான இலக்கியங்கள் இருந்தன என்பதாகும்.

இவ்வாறு நம் மொழியைப்பற்றி ஒருவர் கூறியுள்ளார்.

மற்றொர் அறிஞர் திரு. சி. பி. மத்யூ என்பவர் கூறுவதையும் காண்க.

இந்திய இலக்கியம் என்றால் சமசுகிருதம் என்று எண்ண வேண்டாம். அதைவிடப் பண்மடங்குச் சிறந்த இலக்கியச் செல்வங்களைக் கொண்ட திராவிட மொழிகளும் உண்டு.

நம்மொழியை எத்துணைப் பேர்தான் பாராட்டியுள்ளார்கள். பிலியோநாத் என்பாரும் நம்மொழியைக் குறித்துக் கூறியுள்ளதையும் கவனிக்கற்பாலது.

"பதினேழாம் நூற்றாண்டின் காலத்தில் தமிழ் மொழியின் இலக்கியம் செம்மையுடையதாய் இருந்தது." இன்றைக்கு 300 ஆண்டுகட்கு முன் நம் மொழிச் சிறப்புடையதாய் இருந்திருக்கின்றன.

அவ்வாறு இருந்த நம் மொழி இன்று இந்த மொழியினால் பங்கம் வந்திடின் நாம் வாளா இருக்கலாமா? சிந்தியுங்கள்.

இந்திய இலக்கியத்தை ஐரோப்பியர்கள் அறிய முடிந்தது நம் தமிழ் மொழியில்தான் என்று ஒருவர் குறிப்பிடுகின்றார். மேலும் ஒருவர் கூறியுள்ளதை கவனிப்போம்.

"அரசியல் கலாச்சாரக் கருத்துக்களைத் தெளிவான முறையில் சொற்களின் மூலம் எடுத்துரைக்கும் இயல்பு வாய்ந்த சக்தியைத் தமிழ் மொழித் திறம்படப் பெற்றுள்ளது. மில்டன், சேக்சுபியர், காளிதாசர் போன்றவர்களின் இலக்கிய அற்புதங்கள் எவ்வாறு ஒரு குறிப்பிட்ட சமுகத்திற்கே ஒன்றில்லாமல் உலகத்திற்கே சொந்தமாக இருக்கிறதோ அவ்வாறே தமிழ் மொழி இலக்கியங்களும் எல்லா நாட்டுமக்களுக்கும் உரித்தானதாக விளங்குகின்றது."

இவ்வாறு திரு. விசய பிரசாத்சிங்ராய் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இவர் வங்க நாட்டில் வாழ்பவர். முன்னாள் அமைச்சர்.

"தமிழில் என்ன இருக்கின்றது என்று கூறி அலையும் அருமை நண்பர்கள் திரு. ராய் அவர்கள் கூறியதை அறிவது; அவர் நம் அறிவு நலம் தூய்ப்பதாகும். அடுத்தொருவர் கூறியதைக் கவனிப்போம்.

தமிழர்கள் அறிவோடு அடக்கமும், அன்போடு பண்பும் மிக்கவர்கள். அவர்களிடம் வீண் ஆடம்பரம் இல்லை. ஆனால் விருந்தோம்பும் பண்பு உண்டு. நான் தமிழகத்தில் வாழ்ந்த நேரத்தில் பழிக்கக்கூடிய எந்த வித வகையான ஒழுக்கங்குறையையும் அவர்களிடம் காண முடியவில்லை.

திரு. ஹூயியேன் வென்சொான் அவர்கள் கூறிய மொழியே மேலே காணப் பெறுவது. அவர் நம்மைப் பற்றிக் கூறிய செய்தியை நம்மில் எத்துணைப் பேர் நடத்திக் காட்டுகின்றார்கள்?

"தமிழர் போதிய அளவு மன உறுதியும், ஆண்மையும் அறிவாற்றலும் படைத்தவர்கள். எனவே, இன்று தாழ்ந்து

கிடக்கும் தென்னாடு முழுவதற்குமே வழிகாட்டித், தென்னாட்டைப் பொன்னாட்டாக்கும் முழுப் பொறுப்பும் தமிழர்களையே சாரும்."

திரு. குய்சுதாவலெபோன் அவர்கள் கூறியதியையும் நம்மவர்கள் படித்தால் நலம். அவர் தம் கூற்றுப்படி நடப்பவர்கள் நாம்தானே! தமிழகத்திற்கும் தமிழ் மொழிக்கும் வழிகாட்டித் தி. மு. க; தான்.

தமிழுக்குப் பிற மொழியினத்தார் ஊக்கமும், ஆக்கமும் காட்டுவதுபோல் தமிழர்கள் காட்டுவதில்லை. ஒருசிலர்—தமிழ்ப்புலவர்களுங்கூடத் தம்புழைப்புக்காகத்தான் அதனைக் கற்கிறார்களே தவிர, நம் மொழியைச் சீர்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இல்லை. அதனால் தமிழ் மொழி இந்தியினும் சீன நிலை யடைந்திடக் கூடியதாகிவிட்டது. தமிழுக்குத் தொண்டு புரிந்து வாழாத தமிழனைக் கழுகு மரத்தில் ஏற்றி விடுவது மிகுந்த நலம். தன் தாய்க்குத் தொண்டு புரியாதவனை என்னதான் கூறி அழைப்பது? அவர்கள் இருப்பதும் ஒன்றுதான். சாவதும் ஒன்றுதான்!" என்று ஒரு தமிழறிஞர் பெருமகனார் என்னிடம் கூறினார். அவர் அவ்வாறு கூறியதற்குக் காரணம் அந்த அளவிற்கு தமிழர்கள் இருக்கின்றார்கள். நாம் அவர்கள் பால் இரக்கம் கொள்ளுகின்றோம்.

"இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைக் கேலி செய்கின்றார்கள் என்றால் அவர்கள் குலத்தை ஆராய்தல் வேண்டு" மென்று பிறிதொரு கவிஞர் அவர்கள் எம்மிடம் கூறினார்கள். இதையெல்லாம் நாம் இங்குக் கூறுவதற்குக் காரணம் அவர்கள் நம் போராட்டத்திற்குப் பெரிதும் ஆதரவு நல்கின்கிறார்கள் என்பதற்காகத்தான்.

இந்தி மொழியினால் தமிழுக்கு ஆபத்து என்று நாம் கூறினால் சிலர் முகத்தைச் சுழிக்கின்றார்கள். அவர்கள் கீழ் வருவனவற்றைப் படிக்கட்டும்.

1955-ல் மலேயாவில் பல்கலைக் கழகம் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழைக்காக்க விரும்புவோருக்கும் நல்ல வசதி செய்து கொடுத்தது. இதை நம் தமிழ் மக்கட்குச் செய்து கொடுத்தவர் அந்நாட்டு முதல்வர் மார்சுல் அவர்கள். அவரிடம் இந்தியாவின் மொழி இந்தியாயிற்றே என்று சிலர் கேட்டார்கள். அதற்கு அவர் "இந்திக்கு இங்கு என்ன வேலை?" இங்கிருப்போரில் பெரும்பாலோர் தமிழர்கள்தான். வடக்கத்தியான்

அல்ல. ஆகவே, தமிழுக்குத்தான் இடமளிக்க வேண்டுமென்று கூறினர் இதைப்பார்த்தப்பின்னரும், கேட்ட பின்னரும் தமிழ் மகனுக்குப் மதிவர வேண்டாமா? தமிழ் நாட்டில் இந்திக்கு என்ன வேலை? நம் அமைச்சர்கள் கேட்க வேண்டாமா? தமிழனே சிந்தித்துப் பார்.

தமிழ்மகனே! உன் எழில் தமிழை இளங்கோ அடிகள் எடுத்து விளையாடிய விதத்தைப்பார்!

அறிவு அறை போகிய
பொறி அறு நெஞ்சத்து
இறை முறை பிழைத்த
வாயி லோ யே.

சிலப்பதிகாரத்தில் உள்ள ஒரு பாடல் இது. அதாவது கண்ணகி தனது வாழக்கை நீதியுடன் விசாரிக்காது கோவலனை வெட்டி விட்ட கோப வெறியால் அக்காலத்தில் அரசு செலுத்திய நெடுஞ்செழியனை அறிவு அறை போகிய என்று திட்டி; இறை முறை பிழைத்த அரசாங்கமே என்ருள். அது போல நம் அரசாங்கம் நமது மொழியைப் புறக்கணிக்கும் நிலை கண்டு இப்பாடலைச் சான்ருகக் கொண்டு தமிழைக்காப்பதில் நம் அரசு அறிவு அறை போகி இறை முறை பிழைத்தது என்ருல் மிகப்பொருத்தம்தானே!

மேலும் இப்பாடலுள்ள றகரம் குறித்துப் பேராசியர் (காலஞ்சென்ற) திரு. சேதுபிள்ளை அவர்கள் பேசியுள்ளார். இச் செய்யுளில் றகரம் அறு முறைவந்த பெருமையைக் குறித்துப் பேசியுள்ளார். றகரம் போன்று ழகரமும் நம் மொழிக்குச் சிறப்புத் தருவன. இவ்வாறு எல்லாம் நம் மொழிச்சிறப்பாக இருப்பதால்தான் மலேயாவில் நம்மொழி வாழ்கின்றது. இனியும் வாழும். எப்பொழுதும் வாழும். இதற்கெல்லாம் காரணம் நம் தமிழ் மொழி இலக்கியம் எதையும் சார்ந்திரும்பதன்று. கலாச்சாரப் பயனுல் அது தனித்தியங்க வல்லது.

ஆங்கிலம் வணிகத்தின் மொழி யென்றும் இலத்தின் சட்டத்தின் மொழியென்றும், கிரேக்கம் இசையின் மொழியென்றும், செர்மன் தத்துவ மொழி என்றும், பிரெஞ்சு தூதின் மொழியென்றும், இத்தாலியம் காதலியின் மொழி யென்றும் தமிழ் இரக்கத்தின் மொழியென்றும் அறிஞர் தனிநாயக அடிகள் கூறுகிருர்கள். ஆனல் இந்தி எந்த மொழி? தமிழர்களே! சிந்தியுங்கள். நம் மொழி இரக்கத்தின் மொழியாயின் நம் மொழி பேசும் மாந்தரும் இரக்க முடையவரன்ருே?

நாற்பது ஆண்டுகள் தமிழுக்காகவும், தமிழ் நாட்டிற் காகவும் இடைவிடாது பணியாற்றிய அயல் நாட்டினரான எம்மானேர் திரு. எம். வீரமா முனிவரைவிடத் தமிழ்மகன் கடையன் என்று தமிழகத்து மகனைக்கூறிவிடக் கூடாது இனி. இதுகாறும் நாம் கண்மூடிக்கிடந்தோம். இந்த அவலம் போதும். தமிழன் தமிழைக் காத்தருளல் வேண்டும். அதற் கானப் போரில் அணிவகுத்து நிற்றல் வேண்டும். அதைச் செய்யாதவன் உலகில் கேடுகெட்ட ஓர்இனமாகத்தான் அவன் வாழ்வான்.

போப் என்ற கிறித்துவப் பாதிரியார் ஆங்கிலத்தில் அமோக வெறி கொண்ட அன்னர்; தமிழில் தேனினும் இனிய திருக்குறள், திருவாசகங்களின் இனிமையைப் பருகி, ஆங்கிலத்தில் மொழி பெயர்க்குமளவிற்குத் தமிழ் மணம் கமழுமானல் ஆங்கிலேயரே தமிழ் மொழியில் பற்றுக் கொண்டார் என்றுல் நம்தமிழனுக்கு மதி எங்குப்போயிற்று?

திரு. ஈராசு பாதிரி அவர்கள் ஒரு சமயம் அண்ணமலைப் பல்கலைக்கழகத்தில் சொற்பொழி ஆற்றியபோது கூறினர் கள். Father! heras is not speaking to you but a dravidan fram sqain! என்று.

அதாவது உங்கட்கு முன் பேசுவது ஈராசு பாதிரி அல்ல. சுபெயின் நாட்டிலிருந்து வந்த ஒரு திராவிடன் பேசுகின் றேன். என்று கூறினர்.

இதைக் கேட்ட நம்மவர்கட்கு மதிப்பிறக்க வேண் டாமா?

நம் தமிழுக்குத் தொண்டு புரிந்த நாட்டுப் பெரியவர் களை இரண்டாம் பாகத்தில் விரிவாய்க் காண்போம். ஆனல் மேலை நாட்டவர்களைச் சிறுக இங்குக் காண்போம்.

திரு. கர்னல் மெகன்சி என்பவர் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தவராகுவார். இவர் தோற்றுவித்தச் சங்கத் தில் தமிழ்ப் புலவர்கள் அங்கம் வகித்தார்கள். அச்சங்கத் தில் சிறந்து விளங்கியவர்களில் வித்துவான் திரு. தாண்டவ ராய முதலியார் அவர்களும் ஒருவர்.

அடுத்துச் சென்னை மாவட்டத்தின் தண்டலரராக இருந்த திரு. எல்லிசு அவர்களும் தமிழ் மொழிக்குத் தொண்டு புரிந் தவர்களில் ஒருவர். இவரைப் போன்று திரு. போப் ஐயர் அவர்களும் தொண்டு புரிந்தவர். இவர்; திருக்குறள், நாலடி

ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்ந்தவர். இவர் தம்முடைய கல்லறையில் தமிழ் மாணவன் என்று எழுதும் படி வேண்டிக் கொண்டார் என்பதைக் குறிப்பிடத் தக்கது. அடுத்தொரு பெருமகனுர் கால்டுவெல் என்பவர். இவர் திராவிட மொழியைக் குறித்துத்; திராவிட ஒப்பிலக்கணம் என்ற நூல் ஒன்றைத் தோற்றுவித்தார். அந்நூலைக் குறித்து நமது புலவர் க. கோவிந்தன் எம். ஏ., எம். எல். ஏ; அவர்களும் ஒரு நூல் எழுதியுள்ளார். மற்ருெருவர் திரு. சார்சு ஆரிங்டன் என்பவரிடம் "பட்லர்" வேலைப் பார்த்த திரு. கந்தப்பன் அவர்களிடமிருந்த திருக்குறள் ஓலைப்பிரதி யைக் கொண்டு 1831இல் திருக்குறள் அச்சேற்றமாகியது—மூலம் மட்டும்.

இவர்கள் போன்று அமெரிக்கா பாதிரிகள் உடற்கூற்று நூல் அறிவியல் நூல், இவைகளை ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்துத் தமிழுக்குத் தொண்டு புரிந்தார்கள். இத்தாலி நாட்டிலிருந்து நம் நாடு வந்த வீரமாமுனிவர் அவர்களும் தமிழுக்குத் தொண்டு புரிந்தார்கள். இவர் தமிழில் நூல் கள் யாத்தது போன்று வேறு யாரும் (மேல் நாட்டார்) நூல் யாத்ததில்லை. இவர் இயற்றிய நூல்களாவன.

திருக்கோவிலூர் கலம்பகம், கித்தேரினத்தார் இயல்பு, கித்தேரித்தம்மாள் அம்மானை, வேதவிளக்கம், போதக மறுத் தல், வேதியர் ஒழுக்கம், பரமார்த்தக் குரு கதை, சதுர் அக ராதி, தொன்னூல், தேம்பாவணி, தேம்பாமாலை, அடைக்கல மாலை, வாமன் சரித்திரம், ஞானவிளக்கம், திருச்சபைக் கணி தம், தமிழ் இலத்தின் அகராதி.

திரு. ராட்லர் அவர்கள் தமிழ்— ஆங்கில அகராதி எழு தினர். இது 1883-ல் வெளிவந்தது. அடுத்தொருவர் திரு. வின்லோ அவர்கள் 1862இல் தமிழ் ஆங்கில அகராதி எழுதி னர். இம்மட்டோ?

திருவாளர்கள்; பெசுகி, டிபூசெசு, ஆகியோர்கள் பிரெஞ்சு—தமிழ் அகரதி எழுதினர். 1955இல் இரசிய-தமிழ் இரசிய மொழி—இரசிய,—தமிழ் ஆகிய நூல்களும் எழுதப் பெற்றது. இவை நீங்கலாக வேறு பலரும் நம் தாய் மொழிக்குத் தொண்டு ஆற்றியுள்ளார்கள்.

நம் தமிழ் நாட்டிலிருந்து சென்ற காப்படன் திரு. பதி அவர்கள் 35 ஆண்டுகளாக இலண்டன் பல்கலைக் கழகத்தில் பணியாற்றுகிறுர். அவருடன் நம் நாட்டிற்கு வந்து தமி

ழிலக்கியத்தைக் கற்றுச் சென்ற திரு. சார். மார் என்ற ஆங்கிலேயரும் பணியாற்றுகிருர். பதிற்றுப் பத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்; இவர். இவ்வாறு நம் மொழி உலகில் பரவிற்று. ஆனால் நம் நாட்டில்?

இலக்கியம் காலத்தைக் காட்டும் அருமையான கண்ணுடி. அக்கண்ணுடியை நாம் உற்று நோக்கும் போது நமக்கு நம் நாகரீகம், காதல், வீரம், இன்னபிற மிகத் தெளிவாக்காட்டுகிறது. உலகத்திலேயே நாம் மிக மிக உச்ச நிலையிலிருந்தமையைக்காட்டுகின்றது. அப்படி உச்சநிலையிலிருந்த போது— இன்று உலகத்திலேயே—உலக மக்களை விட எல்லாத்துறையிலும் மேம்பாடுடையவர்களாகக் கருதப்படுகிறவர்கள் தேம்சு நதிக்கரையில் மீன் பிடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் நாம் இன்று? இதை ஒவ்வொரு தமிழனும் சிந்தித்துப்பார்க வேண்டும்.

கிறித்துவுக்கு முன் பிறந்த நம் இலக்கியங்கள் எத்தனையோ உண்டு. அவைகளில் தொல்காப்பியமும், திருக்குறளும் சிறந்த நூல்காளகும். கிறித்துவுக்குப் பின் 2-ஆம் நூற்ருண்டிலிருந்து இந்த இருபதாம் நூற்ருண்டு வரை நம் மொழியில் பிறந்த நூல்கள் தாம் எத்தனை?

கி. பி. 2-இல் சிலப்பதிகாரமும், மணிமேகலையும், 3-இல் திருவாசகமும், 4-இல் ஆசாரக்கோவையும், 5–இல் பெருங்காதையும், 6-இல் கல்லாடமும். 7, 8-இல் அப்பர் சுந்தரர் தேவரங்களும், 9-இல் சுந்தரர் தேவரமும், 10–இல் சீவக சிந்தாமணியும், 11-இல் பெரியபுராணமும் 12 தொடக்கத்தில் கந்தபுராணமும், இறுதியில் இராமாயணமும், 13-இல் சிவஞான போதமும், 14-இல் தலபுராணமும், 15-இல் வில்லி பாரதமும், 16-இல் சிறுபுராணமும், தேம்பாவணியும், 18-இல் தாய்மானவர் பாடலும், 19–இல் இராமலிங்கர் பாடலும், 20 தொடக்கத்தில் பாரதியின பாடலும், இருபது இறுதியில் ஏற்படவிருக்கும் எழில்மிகு இலக்கியங்களும் ஒருமுறை உங்கள் கண்முன் கொண்டுவந்து பாருங்கள். அதன் பின் நம் மொழியின் முன்னே எம்மொழியும் நிற்க அருகதையுண்டா என்பதை எண்ணிப்பாருங்கள்.

நாம் பெற்ற இச்செல்வத்தைச்-செல்வ இலக்கியத்தைப் போன்று இந்தி மொழியில் இருக்கின்றனவா? நாம் கூறிய இலக்கண நூல்கள் குறிப்பிடத்தக்கவைகள் மட்டுமே. இன்னும் இங்கு எழுதப்பெருத நூல்கள் எத்தனையோ உண்டு.

அவைகள் அனைத்தையும் சேர்த்துப் பாருங்கள் நம்மொழிக்குள்ள சிறப்பு இருக்கிக்கு உண்டா? தமிழர்களே! சிந்தியுங்கள்.

தென்னாட்டு நாகரிகம் குமரிக்கண்டமாகிய லெமூரியா கண்டத்திலே தோன்றியதாகும். அப்படித் தோன்றிய நம் நாகரிகம், அரப்பா, மகோஞ்சுதரா நாகரிகமாகி யூபிரேட்டீசு, டைகிரிசு, நதிக்கரைகளில் சென்று, அமேரிய நாகரிகமாகி, அதன்பின் எகிப்து, சுபானி, ரோம் நாகரிகமாகி ஐரோப்பிய தேசம் முற்றிலும் பரவி, ஐரோப்பிய நாகரிகம் என்று தனி நாகரிகமாகவும் ஆகிவிட்டது. நம் நாகரிகம் உலகம் முழுவதும் பரவிற்று — என்று ஈராசு பாதிரி அவர்கள் கூறுகின்றார்கள். உலகில் நம் நாகரிகம் பரவியதால் அங்கு நம் மொழியைப் பேசும் மக்கள் இனத்தையும், நம் மொழி அங்கு எப்படி ஆட்சி செய்கின்ற விபரத்தையும் இரண்டாம் பாகத்தில் காண்போம்.

தமிழராகிய பாண்டியரின் தொடர்பால் வந்த எகிப்தியருடைய நாகரிகமே உலகில் பெரும்பாலும் பரவிற்று. எகிப்திய நாகரிகமே முதலிலெழுந்தென்று சிலரும், பாபிலோனியரின் நாகரிகமே முற்பட்டதென்று சிலரும் கூறி வாதிப்பர். அவ்விருவர் நாகரீகமும் தமிழரால் வந்ததேயன்றி வேறல்ல என்பதும், பாண்டியர் குடியேறிய நாடே எகிப்து என்றும், சோழர் குடியேறிய நாடே எகிப்து என்றும், சோழர் குடியேறிய நாடே சாலிதியா என்தும் சாலிதியா குடியேறிய மெசப்டோமியாவாகிய நாடே பாபிலோனியா என்றும் வழங்கப்பட்டன.

இவ்வெகிப்தியரும், பாபிலோனியரும் போனிசியருமே கிரேக்கர்க்கு நாகரிகங் கற்பித்தவர். கிரேக்கர்க்குக் கற்பிக்கப்பட்டதைக் கிரேக்கரிடமிருந்து உரோமர் அளித்தனர். பின்னர் உரோமர் தாம் கற்றுக்கொண்டதைச் சபீரியர், கெல்துக்கள், தியூதர்கள், சிலேவாகள், முதலானோர்க்குத் தெரிவித்தனர். இவ்வாறே உலகு எங்கும் தமிழரிடமிருந்து நாகரிகம் பரவிற்று: இது, திரு: அ. சி; செட்டியார் அவர்கள் அருளியவை.

இதை நம் நாட்டவர்கள் நன்கு அறிதல் வேண்டும். நம் நாகரிகம் உலகின் எங்கும் பரவி நிற்க; இந்திமொழி வந்து நம் நாட்டின் பண்பாடு நாகரிகம் அத்தனையையும் அழிக்கவிடலாமா?

சங்க காலத்தில் தமிழ் நாட்டில் இல்லாதன; இன்று வந்து குடி புகுந்துள்ளதை அறிதல் வேண்டாமோ?

தீண்டாமை, பாராமை, பிறப்பால் உயர்வு தாழ்வு கருதுதல், சாதிப்பிரிவுகளும், அவற்றால் சண்டைகளும், தரகுத் திருமணம், புரோகிதத் திருமணம், கர்மாவதி பிற மொழியால் மந்திரம் சொல்லுதல், இசை பாடுதல், அடிமை வேலைக்கு அலைதல், உழவு, தொழில் இகழ்தல், பெண்ணடிமை, பிறநாட்டவரால் ஆளுதல், மன்றங்களில் வழக்காடுதல் இன்னும் பிற, சங்ககாலத்தில் இல்லாதவைகள்.

இவ்வாறு தமிழகத்தில் ஒரு சமயம் இல்லாதவைகள் நாட்டில் குடி புகுந்துவிட்டது. அதை நீக்க எத்துணைக் காலமாகுமோ? இன்னும் இந்தி மொழியும் அதன் நாகரிகமும் வந்தால் தமிழன் என்ன ஆகுவான்?

ஒரு மொழி ஒரு நாட்டிற்குத் தேசிய மொழியாக இருக்கவேண்டுமாயின் அம்மொழியில் நாகரிகத்தை வளர்க்கவும், பண்பாட்டைப் போற்றவும், தலைசிறந்த இலக்கியங்கள் இருத்தல் வேண்டும். அவ்வாறு இந்தியில் எந்த நூலாவது இருக்கின்றனவா? நம் மொழியில் அவ்வாறு இருக்கிறது. அவ்வாறு நம் மொழியில் இருப்பதனால்தான் நம் மொழியை இந்தியாவின் தேசிய மொழியாக வைக்க வேண்டுமென்று கூறுகின்றோம். இப்படி கூறுவது சிலர்க்கு எப்படி இருக்கின்றனவோ! ஆனால் நம் மொழி இந்தியாவின் தேசிய மொழியாக இருந்ததுண்டு என்று "இந்தியத் தத்துவ மூட்டுவர்களால்" கருதப்படுகின்றன. அப்படி இந்தி மொழி இதற்குமுன் எப்பொழுதாவது தேசிய மொழியாக இருந்ததுண்டா?

தேசிய மொழியா உள்ளதற்குக் குறைந்தபட்ச தன்மை (யோக்கியதையாவது) இருத்தல் வேண்டும். பண்பாடு, பண்பாடு என்று நாம் அடிக்கடிக் கூறுகின்றோமே, இது ஒன்றாவது ஒருமொழிக்கு இருத்தல்வேண்டும். பண்பாடு, நாகரிகம் என்பதெல்லாம் மொழியின் அடிப்படையில் அமைவதாகும். அவ்வாறு நோக்குமிடத்து நம் மொழியில் அமைந்த இலக்கணங்களே நற்சான்றாகும். நம் மொழியில் இருக்கும் பண்பாடு உலகில் எம்மொழியிலும் கிடையாதென அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

மொழி, பண்பாடு, நாகரிகம், கலை இவைகளை கூறுவதற்கு ஒரு சான்று ஈழப்பெருமகனார் அறிஞர் தனிநாயக அடிகள் கூறுவதைக் கேளுமின்!

செய்யுள் இயற்றுவதும் ஒருகலை செப்பமாய் நெய்யிட்டுச் சீவி முடிப்பதும் ஒருகலை, கல்லினைச் செதுக்கி உருவாக்கு

வதும் ஒருகலை. பென்சிலைச் சீவுவதும் ஒருகலை. இசைபாடு வதும் ஒருகலை. வசை பேசுவதும் ஒருகலை. ஒப்பாரி பாடு வதும் ஒருகலை. யாழினை மீட்டுவதும் ஒருகலை. நடனம் ஆடுவதும் ஒருகலை. நகைச்சுவை வளர்ப்பதும் ஒருகலை. கோயிலை வளர்ப்பது ஒருகலை. கோனார் பால் கறப்பதும் ஒருகலை.

இவ்வாறு கலையை விரித்துக் கூறுகின்றதனால்தான் நம் கலைச்சிறப்பை யுணரமுடிந்தது. நம்கலை "எண்ணெண்கலையும் இசைந்துடன் போக" என்புதனையும் நாம் உணரல்வேண்டும்.

இத்தகைய நம் கலையையும், நம் மொழியையும் சிலர் அழிக்க முயன்றார்கள். அவர்களுடன் அரசியல் இயக்கங்கள் நடத்துகின்றவர்களும் ஒன்று சேர்ந்துகொண்டார்கள்.

தவிரவும், பிறநாடுகளிலெல்லாம் அரசியல் கட்சிப் பல இருப்பினும், நாட்டுமொழி அவை எல்லாவற்றிற்கும் பொதுவாகும். இப்பாழாய்ப்போன தமிழ்நாட்டிலோ ஒவ்வொரு கட்சியெடும் ஒவ்வொரு மொழித்தொடர்புப்படுத் தப்படுகிறது. அதிலும் கேடாக நாட்டு மொழியே நாட்ட வரால் வெறுக்கப்படுகின்றது. மொழியல்லவா மக்கள் முன் னேறும் வழி? தாய் மொழியைப் பேணாத நாடு தமிழ்நாடு தவிர வேறு எதேனும் உண்ட? இவ்வாறு தமிழறிஞர் தேவநேயப்பெருமகனார் கூறுகின்றார்கள். அவர் தம் கூற்றுப் தானே இன்று நம் நாடு இருக்கிறது. என்று விழிப்படையும்? யார் விழிப்படையச் செய்வர்? யார் முழுப்பொறுப்புடன் நடப்பார்? நான் இப்படிக் கேட்டதுடனே நின்றுவிடுமா?

தமிழுக்கு இன்று வந்துற்ற நிலைமையை எண்ணிப் பார்க்குமிடத்து நாம் சிறிதளவுகூடப் பொறுத்திருக்கக் கூடாது. நம் மொழிக்கு இன்று பேராபத்து வந்துவிட்டது. நம் மொழியை அழிக்க சிலர் முனைந்துவிட்டார்கள். நம் மொழியை நாம் காப்பாற்றித் தீரவேண்டும். நாம் இன்று அதற்கான வழி வகையைச் செய்யவேண்டும். நாம் பிறவிப் பயன் பெற்றது எதற்கு? ஏதேனும் ஒன்று செய்யவேண்டு மென்பதற்காகத்தான். ஆம்! நாம் ஒன்றே செய்யவேண்டும். அந்த ஒன்றும் நன்றே செய்யவேண்டும். அந்த நன்றை இன்றே செய்யவேண்டும். எனவே தமிழ்ப் பெருங்குடிப் பெருமக்களே! உங்கள் கடமையைச் செய்புங்கள். உங்கள் கடமையைச் செய்யத் தவறாதீர்கள்.

நம் மொழியை இந்தி மொழியினுல் அழிக்க முற்பட்டிருக்கிருர்கள். அதனுல் நாம் அனைவரும் ஒன்றுகூடித் தமிழைப் பேணல் வேண்டும். தமிழைத் தமிழன் பேணுததினுல் அளவிறந்த நூல்கள் அழிந்து போயின. அதொடு மட்டுமன்று கடல் கோளர்ல் அழிந்த நூல்கள் எத்தனையோ உண்டு என்ருலும் பதினெட்டாம் பெருக்கினுலும் அழிந்து போன நூல்கள் மிகப் பல என்றும் அறிஞர்கள் கூறுகின்ருர்கள்.

மேலும் தமிழ்நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் தற்குறிகள். அதனுலும் தமிழ்த் தழைத்தோங்குவதற்கு மிகுதியாக இடமில்லாமற் போய்விட்டன என்றும் கூறுகின்ருர்கள். எஞ்சிய தமிழ் நூற்களைக் காப்பற்றவும், நூற்றுக்குத் தொண்ணூறு பேர் தற்குறியாக இருக்கும் இழிநிலையை நீக்கவும், இந்தியினுல் வந்துற்ற பேராபத்தைப் போக்கவும் தமிழர்கள் ஒன்றுகூடித்தான் ஆகவேண்டும். அந்த நன்நாளே, தமிழர்தம் பொன்னுள்!

தமிழ்நாட்டில் தமிழ்ப் பெயரை வைத்துக்கொண்டவர்கள் எவ்வளவு கேலிக்கு ஆளானுர்கள் தெரியுமா?

சுவாமி வேதாசலம் என்ற பெரியார் தன் பெயரை மறைமலையடிகள் என்று வைத்துக்கொண்டார்கள். அது போன்று திரு. வி. கோ. சூரியநாராயண சாத்திரி அவர்கள் தம் பெயரைப் பரிதிமாற் கலைஞர் என மாற்றிக்கொண்டார்கள். திரு. பரிதிமாற் கலைஞர் அவர்களைத் திராவிட சாத்திரி என்று சி. வை. தாமோதிரம் பிள்ளை அவர்கள் அழைப்பாராம். காரணம் திரு. பரிதிமாற் கலைஞர் திராவிட நாகரிகத்தைப் போற்றியதனுல்தான். இதனை திரு: பரதிமாற் கலைஞர் அவர்களே, திரு. பிள்ளை அவர்களைக் குறிப்பிடுங் கட்டுரை ஒன்றில் கூறியுள்ளார்கள்.

திருநெல்வேலிப் பால்வண்ண முதலியார் அவர்கள் "சொற்பொழி வாற்றுப்படை" என்றதொரு நூல் இயற்றியுள்ளார். அது மேடையில் எப்படிப் பேசுவது என்பதை அறியும் நூல். அக்காலத்தில் உபந்நியாசம், பிரசங்கம் என்ற சொற்களுக்கு அழகான தமிழ்ச் சொற்களை உருவாக்கியவர் திரு. முதலியார் அவர்களே ! அப்படி திரு. முதலியார் அவர்கள் கூறியதால் அவர்களை அதோ போகிறது சொற்பொழிவு என்று கேலி செய்தனராம். இப்படிப்பட்டத் தமிழகத்தில்; தனித்தமிழ் வேண்டும் என்று கூறும் அளவிற்குக் கொண்டுவந்த பெருமை யார்க்கு?

MAD

தனித்தமிழ்ப் பேசியதாலும், தமிழ்ப் பெயர்களைத் நமக்கு வைத்துக்கொண்டதாலும் நம்மவர்கள் கேலிக்காளாகிய தையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். எனவே,

இப்பவோ, பின்னையோ, மத்தியானத்திலோ இரவிலோ, இரவுபடு நேரமதியிலோ, பகலிலோ உதயகாலத்திலோ, அந்த நேரமதிலோ, அப்பிலோ, தீயிலோ, பேயிலோ, நாயிலோ, அரவுபடுமிடிதனிலோ, ஆறுத புண்ணிலோ, நடைநோவுதனிலோ, ஆயுதங்களினாலோ, செப்பறிய வீட்டிலோ, காட்டிலோ, மேட்டிலோ, தெருவிலோ, திண்ணைதனிலோ உலகந்தனில் நம் உயிர் போவது உறுதி.

ஆம்! நண்பர்களே! ஆம்! மேற்கூறிய எதிலாவது நம் உயிர் போவது என்பது உறுதி. 'இனி நாம் பிறக்கப்போவதில்லை. இறப்பது உறுதி. அப்படி நாம் மேற்கண்ட எதிலாவது ஒன்றில் நம் உயிர் போவதைவிட நம் தாய் மொழியாம் தமிழைக் காத்தருளுவதற்குப் போகட்டுமே!

நாம் ஈடுபட்டு ஈட்டுகின்ற பொருள் எல்லாவற்றிற்கும் ஈடு செய்ய முடியாது ஒன்று இருக்குமாயின்; அது புகழ் ஒன்றுதானே! அந்தப் புகழ் நம் தாய்மொழியைக் காத்தருள்வதில் கிடைக்கட்டுமே!

எனவே, பெரியோர்களே! தாய்மார்களே! இளஞ் சிங்கங்களே! எதிர்கால வாலிபப்பட்டாளங்களே! உதய சூரியன் அணியில் சேரப் புறப்படுங்கள்! புறப்படத் தயாராகுங்கள்!

★

---

## காணிக்கை

தமிழ் மொழியைக் காத்திடவும், இந்தி மொழி ஆட்சி மொழியாகுவதை எதிர்த்திடவும், தன்னுயிரையே அர்ப்பணித்த அரும்பெருந் தியாகியாம் திருச்சி நண்பர் திரு. சின்னச்சாமி அவர்கட்கு இந்நூலினைக் காணிக்கையாக ஆக்கிப் படைக்கின்றேன்.

1—2—64
சென்னை-26

இன்னன்,
அன்புள்ள,
பே. ஆ. குறளேருழவர்.

---

அச்சிட்டது : முல்லை அச்சகம், சென்னை-6.